ஸ்ரீ

தமிழரசு.

வணக்கம்.

அங்கயற்கண்ணம்மை.

"பொங்குருச் செல்வங் கல்வி பொருவிலா வாய்மை தூய்மை
இங்கெமக் கருள வல்ல வினையிலா வெம்பி ராட்டி.
பங்கயத் தடஞ்சூழ் கூடற் பவளமால் வரையை நீங்கா
அங்கயற் கண்ணி மங்கை யடிக்கம லங்கள் போற்றி."

பெரும்பற்றப்புலியூர் நம்பி,

மலர்-க. { உருத்ரோத்காரி௵ கார்த்திகை௴ 1923௵ நவம்பர்—டிசம்பர்௴ } இதழ்-உ.

(கதாசரித்சாகரம்.)

வரருசி சரிதம்.

(29-ம் பக்கத் தொடர்ச்சி.)

அதனைக் கேட்ட வரருசி மானத்தினால் உந்தப்பட்ட மனத்தினை யுடையவராய்த் தாமும் பரமசிவனுடைய அருளினைப் பெற வேண்டும் என்று கருதித் தம்மிடமிருந்த பொருளினைத் தம்முடைய நண்பனான ஹிரண்யகுப்தன் என்னும் வைசியனிடத்தில் கொடுத்துத் தன் வீட்டின் செலவிற்கு வேண்டும் பொருளினை உபகோசையிடம் கொடுக்கும் வண்ணம் கூறிவிட்டுத் தம்முடைய மனைவியான உபகோசையிடத்தில் "நான் பரமசிவனை யாராதிப்பதற்கு ஹிமாலயம் செல்கின்றேன். நான் வருந்துணையும் தனிமையால் வருந்துதலை ஒழிவாயாக" என்று கூறித்தேற்றிக் கைலாச மலையை யடைந்து பரமசிவனைக் குறித்துத் தவஞ்செய்துகொண்டிருந்தார்.

இஃதிங்ஙனமிருக்க, இங்கே பாடலிபுத்திரத்தில் உபகோசை யானவள் தவம் செய்யச்சென்ற தன்னுடைய கணவருக்கு நன்மை யுண்டாக வேண்டும் என்று கருதித் தினந்தோறும் கங்கை சென்று

நீராடி நோற்று வருவாளாயினள். அவள் அங்ஙனம் செய்துவருகையில் ஒரு நாள் அவளிடத்தில் அரசபுரோகிதனும் தண்டத்தலைவனும், அரசிளங்குமாரனுக்கு மந்திரியாயிருப்பவனும் ஆகிய மூவரும் தனித்தனியே மையல்கொண்டு அவள் கங்கைசென்று நீராடித் திரும்பும்பொழுது முதலில் அரசிளங்குமரனுடைய மந்திரி, அவளை வழிமறித்து அவளெதிர்நின்று தான் அவளிடத்தில் காதல்கொண்டிருப்பதாகவும் தன்னோடு அவள் சேரவேண்டும் என்றும் தன்னுடைய கருத்தை யறிவித்தான். அவன் கூறியவற்றைக்கேட்டு உபகோசை அஞ்சினாளாயினும் மனத்தில் தைரியங்கொண்டு அவன் தன்னிடத்தில் கொண்ட தகாக்காதலுக்கு மாறுசெய்யவேண்டும் என்று கருதி அவனை நோக்கி "பெரியவரே! நீர் எவ்விதம் என்னிடத்தில் காதல் கொண்டிருக்கிறீரோ அவ்விதமே நானும் உம்மிடம்காதல்கொண்டுள்ளேன். அதனை நான் வெளிப்படுத்தாமலிருந்தேன். இப்பொழுது நீர் வெளியிட்டுக் கூறியதால், நான் உடன்படுகின்றேன். நானோ மேலான குலத்தில் பிறந்து மேலான குலத்தில் புகுந்துள்ளேன். நீரும் அவ்விதமே உயர்குடிப் பிறந்துள்ளவராக இருக்கின்றீர். நாம், யாவருமறிய இக்காரியத்தில் பிரவர்த்திக்கும் பக்ஷத்தில் உலகத்தவர் நம்மை இகழ்வார்கள். அதனால் நமக்கு மேன்மைக் குறைவுண்டாம். ஆதலின் ஜனங்கள் யாவரும் இப்பொழுது இவ்வூரில் நடக்கும் திருவிழாவில் கண்ணாயிருக்கும்பொழுது நீர் நாளை இரவு முதல் யாமத்தில் என்வீட்டிற்கு வருவீராக. அப்பொழுது நம்முடைய மனோதத்தை நிறைவேற்றிக்கொள்வோம்" என்று கூறினாள். அவளுடைய இனிமையான சொற்களில் மயங்கிய அரசகுமாரனுடைய மந்திரி "அங்ஙனமே யாகுக" என்று கூறி அவளை விட்டுவிட்டான்.

தெய்வ யத்தனத்தால் அவனிடமிருந்து விடுபட்ட உபகோசை சிறிது தூரஞ்சென்றவுடன் அரசபுரோஹிதன் எதிர்ப்பட்டு முன்னர் வந்தவன் கூறியவாறே கூறினான். உபகோசையும் அவன் கூறியவற்றிற்கு உடன்பட்டவள்போலநடித்து அவனை அவ்விரவின் இரண்டாவது யாமத்தில் தன்வீட்டிற்கு வருமாறு கூறி அவனிடத்திலிருந்தும் விடுபட்டுச் சிறிதுவழி கடந்தவுடன் தண்டத்தலைவன் அவளைத் தடுத்துத் தான் அவளிடம் காதல்கொண்டிருப்பதை வெளிப்படுத்தினான். அவனுக்கும் அவ்வுபகோசை முன்னவர்க்குக் கூறிய வண்ண

மே கூறி அன்றிரவின் மூன்றாவது யாமத்தில் அவனைத் தன் வீட்டிற்கு வருமாறு அன்புடையவள்போலக் கூறினாள். அவனும் அவள் கூறிய சொற்களில் ஈடுபட்டு அவளை விட்டுவிட்டான்.

உபகோசை அக்காமுகர்களிடத்திலிருந்தும் விடுபட்டுத் தன் வீட்டை யடைந்து தனது பணிப்பெண்களை யழைத்து அவர்களிடத்தில் தனக்கு நேர்ந்தவற்றைக்கூறி, "பெண்களே! மங்கையர்கள் தம் கணவர் தேசாந்திரம் போயிருக்கும் காலங்களில் தனிமையாக இருப்பதிலும் உயிரை விட்டுவிடுதலே மேலானது. பொதுவாக, பெண்கள் யாவரும் தம்மைக் கற்புடைய மடந்தையராகக் கருதிக் கொள்ளலாம். அவர்கள் நினைத்துக்கொண்ட வண்ணம் அவர்கள் கற்புடையவர்களாக ஆகமாட்டார்கள். பின்னை,

"கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்
உட்குடையாள் ஊர்நா ணியல்பினாள்—உட்கி
இடனறிந் தூடி யினிதி னுணரும்
மடமொழி மாதராள் பெண்."

என்று கூறப்பட்ட இலக்கணத்திற்கு இலக்கியமாயுள்ளவர்களே கற்புடைய பெண்டிர் என்று கூறப்படுவார்கள். மேலே கூறியவற்றில் 'ஊர்நாணியல்பு' என்று பொதுவாகக்கூறப்பட்டதையே—

"அரும்பெறற் கற்பி னயிராணி யன்ன
பெரும்பெயர்ப் பெண்டி ரெனினும்—விரும்பிப்
பெறுநசையாற் பின்னிற்பா ரின்மையே பேணும்
நறுநுதலாள் நன்மைத் துணை"

என்று சிறப்பாகக் கூறியுள்ளார். பெண்டிர்கள் தம்மனத்தில் ஆடவர்களுக்கு இடங்கொடாதிருப்பதுடன் ஆடவர்களும் அப் பெண்டிரைத் தம் மனத்தில் நினைத்தால், அது தீ; சுட்டிடும்; என்று கருதி அஞ்சி ஒழிக்கும் வண்ணம் நடந்துகொள்வதே கற்பு என்று கூறப்படும். இப்பொழுது என்னிடத்தில் அத்தகுதி இன்றாயது. நான் ஆடவர் பிறரை அறியேனாயினும் பிற ஆடவர் என்னைத்தம் மனத்தில் கொண்டு மணக்கக்கருதினர். ஆதலின் நான் நிறையிழந் தவளாயினேன். அங்ஙனம் ஆவதற்கு நான் கணவற்கிழைத்த குற்

றம் யாதென்றறியேன்" என்று பலவாறு கூறித் தன்னை இகழ்ந்து கொண்டு தன் கணவனாகிய வாருசியையே மனத்தில் நினைத்து அன்றிரவு உணவுகொள்ளாமல் தன் சரீரத்தைமெலியச் செய்துகொண்டு உறக்கமின்றித் தனக்கு இவ்விதம் நேர்ந்ததே என்று கருதிக்கொண்டிருந்தாள்.

மறுநாள் பொழுதுவிடிந்தவாறே படுக்கையினின்றும் எழுந்து பணிவிடைக்காரியையழைத்துத் தன் கணவனுடைய சிநேக வைசியனான ஹிரண்யகுப்தனிடம்போய்பெரியோர்களைஉபசரிப்பதற்கென்று சிறிது பொருள் வாங்கிவருமாறு கட்டளையிட்டாள். பணிவிடைப் பெண் இரண்யகுப்தனிடம் சென்று தன் தலைவி அவனிடமிருந்து பொருள் வாங்கிவருமாறு கட்டளையிட்டதைக் கூறினாள். அவன் உபகோசையினுடைய அழகினை அறிந்தவனாதலின், அவளுடைய நாயகனில்லாத இவ்வேளையில் அவளைத் தன்வசப்படுத்திவிடுவது என்று கருதி அப்பொழுதே உபகோசையின் பரிசுத்தமான கிரஹத்தையடைந்து அவளைநோக்கி, "உபகோசையே! நான் உன்னையடைய வேண்டுமென்று நீடித்த நாட்களாக நினைந்துகொண்டிருக்கின்றேன். நீ என்னுடைய எண்ணத்திற்கு இணங்கவேண்டும். அங்ஙனம் இணங்காமல் போவாயானால் உன் கணவன் என்னிடத்தில் கொடுத்த பொருள் முழுமையும் இழந்துபோக வேண்டும். நான் அவற்றைத் தரமாட்டேன். நீ உடன்படுவையேயானால் அவற்றை உன்னிடத்தில் தருவேன்" என்று கூறினான். அதனைக்கேட்ட உபகோசை, ஆ! நம் நாயகர் இவனிடத்தில் பொருள் கொடுத்திருப்பதற்குச் சான்றொருவரும் இல்லையே; அன்றி ஓலைமுறியும் கிடையாதே. நாம் இப்பொழுது இவன் கூறியவற்றிற்கு உடன்படுவது போல நடிக்காதுபோயின் பொருள் முற்றிலும் எடுத்துக் கொண்டு தன்னிடத்தில் பொருள் கொடுக்கவில்லை என்று சாதித்து விடுவான். ஆதலின் நான் இவ்விஷயத்தில் இவனை ஏமாற்றி என் கற்பை நிலைநிறுத்துவதுடன் இவன் கொண்ட எண்ணத்திற்குத் தகுந்தவண்ணம் ஒறுக்கவும் வேண்டும் என்று கருதி மற்ற மூவர்க்கும் முன் கூறியது போலவே அந்த இரவின் கடையாமத்தில் அவனை வருமாறு கூறியனுப்பிவிட்டனள். அவனும் அங்ஙனமே வருவதாக உறுதிகொண்டு சென்றான்.

பின்னர் உபகோசை பணிவிடைப் பெண்ணை யழைத்து நான்கு சிறு ஆடைகளை வாங்கிவரச்செய்து புகைக்கரி எண்ணெய் இவைகளை ஒன்றாகக்கலந்து ஆடையை அதில் தோய்த்து அவற்றை ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு வெளியில் தாழ்ப்பாளுள்ள பெரிய மரப் பெட்டியொன்று செய்வித்து அதனையும் வரவழைத்து வைத்திருந்தாள். அன்றிரவு முதல் யாமத்தில் அரசிளங் குமாரனுடைய ஆசிரியன் உபகோசையின் இல்லத்தினையடைந்தான். அவனை உபகோசை மிக்கமகிழ்ச்சியுடன் வரவேற்பவள்போல வரவேற்று அவனைநோக்கி, "சுவாமி! நீர் ஸ்நாநம் பண்ணிவிட்டு வரவேண்டும்; நீராடாதவர்களை நான் தீண்டமாட்டேன்; உமக்கு நீராடுவதற்கு வேண்டியவற்றை நான் அமைத்து வைத்திருக்கின்றேன்; நீராடு மறைக்குச் செல்வீராக" என்று கூறித் தன் பணிவிடைக்காரிகளை யழைத்து "நீங்கள் இவரை நீராட்டுவித்து இங்கே யழைத்து வாருங்கள்" என்று கட்டளையிட்டாள். உடனே ஏவற்பெண்கள் அவனை இருளாயுள்ள நீராடுமறைக்கு அழைத்துப்போய் அவனுடைய ஆடையணி முதலியவற்றைக் களைந்துவைக்கச் சொல்லி முன்னமே அமைத்து வைத்துள்ள எண்ணெய் கலந்த புகைக்கரியாடையை அவனிடத்தில் கொடுத்தார்கள். அவன் நீராடி அவ்வாடையால் தன் உடலிலுள்ள ஈரத்தைத் துடைத்துக்கொண்டிருந்தான். அப்பொழுது முதல் யாமம் முடிந்து இரண்டாவது யாமம் தோன்றிற்று; அதனை எதிர் நோக்கிக்கொண்டிருந்த அரசபுரோஹிதன் உபகோசையின் வீட்டையடைந்தான். அவனையும் அவள், முன்னர் வந்தவனைப் போலவே வரவேற்றாள். அவ்வேளையில் நீராடுமறையிலிருந்த பணிப் பெண்கள், அரசகுமாரனுடைய ஆசிரியனை நோக்கி, "சுவாமி! மோசம் வந்துவிட்டது. இப்பொழுது இங்கே எமது தலைவியின் கணவருடைய தோழர் வந்திருக்கிறார். அவர் நீர் இங்கே வந்திருப்பதை யறியின் நம் எல்லோருக்கும் தீங்கு நேரிடுவது திண்ணம். ஆதலால் நீர் அவர் வெளியில் போகுந்துணையும் இப்பெட்டியில் ஒளிந்திரும்" என்று அங்கே வைக்கப்பட்டிருந்த பெட்டியைத்திறந்தனர். அவன் அவர்களுடைய வஞ்சனையை யறியாமல் கூறியவற்றை மெய்யென்று நம்பி அதனுள் நுழைந்தான். உடனே அவர்கள் அப்பெட்டியை மூடி வெளியில் தாழ் செறித்தனர்.

பின்னர்ப் புரோஹிதனையும் அவர்கள் தம் தலைவியின் கட்டளையின்படியே நீராடுமிடத்திற்கு அழைத்துப்போய் அவனுடைய ஆடையணி முதலியவற்றைக் களைந்து வாங்கிக்கொண்டு எண்ணெய்க் கரியாடையைக் கொடுத்தனர். அவன் அங்கே நீராடி அவ்வாடையால் தன்னுடல் முழுதும் துடைத்துக்கொண்டான். உடம்பெல்லாம் ஒரே கரிமயமாக ஆய்விட்டது. அப்பொழுது மூன்றாவது யாமம் வந்துவிட்டமையால் அவ்யாமத்திற்கு வரவேண்டியவனான தண்டத் தலைவன் வந்தான். அவன் வந்தவுடனே நீராடுமறையிலுள்ள பணிப்பெண்கள் மிகவும் அஞ்சினவர்கள்போல நடித்துப் புரோஹிதனிடத்தில் முன் வந்தவனுக்குக் கூறியவண்ணமேகூறிப் பேழையுள் புகும் வண்ணம் செய்தனர். அவனும் பேழையுள் நுழைந்தான். அவர்கள் அதற்குத் தாழிட்டு மூடினர்.

பிறகு தம் தலைவியின் ஏவல் செய்பவர்களான அப்பெண்கள் தண்டத் தலைவனையும் நீராடுமறைக்கு அழைத்து வந்து முன்னவர்களுக்குச் செய்தவண்ணமே நாலாவது யாமத்தொடக்கத்தில் இரண்யகுப்தன் என்னும் வியாபாரி வந்தவுடன் தண்டத்தலைவனைப் பேழையுள் செறித்துத் தாழிட்டனர்.

பின்னர் உபகோசை தன் வீட்டிற்கு வந்துள்ள இரண்யகுப்தனுடன் சிறிதுபோழ்து பேசிக்கொண்டிருந்துவிட்டுப் பணிப்பெண்கள் விளக்கை யேந்திவர அவனுடன் நீராடுமறையை யடைந்து அங்கே பெட்டியின் அருகில் நின்றுகொண்டு இரண்யகுப்தனை நோக்கி, "வணிகரே! என்கணவரால் உம்மிடம் கொடுத்துவைக்கப்பட்ட பொருள் முழுமையும் என்னிடத்தில் கொடுப்பீராக" என்றாள். அதனைக்கேட்ட அவ்வணிகன் அவ்வறையில் தங்களைத்தவிர வேறொருவருமில்லாமையை யறிந்து "பெண்ணே! உன் கணவர் என்னிடத்தில் கொடுத்த பொருளெல்லாவற்றையும் உன்னிடமே கொடுக்கிறேன்" என்று கூறினான். அப்பொழுது உபகோசை பெட்டியின் பக்கம் திரும்பி "இப்பெட்டியினுள்ளிருக்கும் கிரஹதேவதைகளே! இப்பொழுது இவ்வணிகர் கூறியவற்றைக் கேட்டீர்கள். அதற்கு நீங்களே சான்று" என்று கூறி விளக்கைக் கொண்டுபோய்விட்டாள்.

பிறகு ஏவற்பெண்கள் மற்றவர்களைப்போலவே அவனையும் நீராடச்செய்து அவனுடைய ஆடையணிகளைக் களைந்தெடுத்துக்கொண்டு

கரியாடையைக் கொடுத்தனர். அவன் அதனால் உடம்பு முழுதும் கரிபூசப்பட்டு அழகிழந்து தோன்றினன். அவனை அப்பெண்கள் அப்பொழுதே அவ்விடத்திலிருந்தும் துரத்திவிட்டார்கள். அவன் உடம்பிற்பூசிய கரியுடனும் அரையிற்கட்டிய அழுக்கடைந்த சிறு ஆடையுடனும் ஒளிந்துகொண்டே தன் வீட்டைநோக்கி யோடினன். நாய்கள் அவனைக்கண்டு திருடனென்று நினைத்துக்குரைத்துக்கடிக்க வந்தன. விடியும் வேளையாயினமையால் தெருவிலுள்ளார் விழித்துக்கொண்டு அவனைக்கண்டு பரிஹாசம் செய்தனர். அவன் மிக்க அவமானத்துடன் தன் வீட்டையடைந்தான்.

பின்னர் விடிந்தவாறே உபகோசை, ஏவற்பெண்களுடன் கூடிக்கொண்டு அரசனான நந்தனுடைய சமுகத்தினையடைந்து தன் கணவர் வாருசி இரண்யகுப்தனிடத்தில் கொடுத்துவிட்டுப்போன பொருளை வாங்கித்தரவேண்டும் என்று முறையிட்டாள். அதனைக் கேட்ட அரசன் இரண்யகுப்தனை வரவழைத்து "வணிகனே! நீ இவள் கணவருடைய பொருளை ஏன்கொடுக்கமாட்டேன் என்கிறாய்" என்று வினவ, அவன் "அண்ணலே! இவள் கணவரால் என்னிடத்தில் ஒரு சிறிது பொருளும் கொடுத்து வைக்கப்படவில்லை" என்று மறுத்தான். அதனைக்கேட்ட உபகோசை, "அரசரே! இவ்விஷயத்தில் சாக்ஷிகள் இருக்கின்றன. தாம் அவற்றை விசாரிக்கவேண்டும். என் வீட்டிலுள்ள மரப்பெட்டியொன்றில் என் கணவர் எங்கள் கிரஹ தேவதைகளை வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார். அந்தத்தேவதைகள் எதிரில் இந்தவணிகன் தான் கொடுக்கவேண்டிய பொருளை ஒப்புக்கொண்டிருக்கின்றான். தேவரீர் சில ஏவலர் மூலமாக அப்பெட்டியை எடுத்துவந்து வினவினால் தெரியும்" என்று கூறினாள். அதற்கு அரசன் சம்மதித்துச் சில ஏவலர்களால் உபகோசையின் வீட்டிலுள்ள பேழையை இராஜசபைக்கு வரவழைத்தான். உபகோசை அப்பெட்டியின் அருகில்போய் நின்றுகொண்டு "தேவதைகளே! நீங்கள் மெய்மையையே கூறவேண்டும். இவ்வணிகன் தான் பொருள் கொடுக்கவேண்டியது உண்டு என்று உங்கள் எதிரில் ஒப்புக்கொண்டானல்லவா? நீங்கள் ஒன்றும் கூறாமலிருந்தால் உங்களைப்பெட்டியிலிருந்து வெளிப்படுத்தி இச்சபையில் கொளுத்திவிடுவேன்" என்று கூறினாள்.

உடனே அப்பேழையின் உள்ளே நின்றும் "ஆம், இவ்வணிகன் எங்கள் எதிரிலே 'பொருள் கொடுக்கவேண்டியது உண்டு' என்று ஒப்

புக்கொண்டான்" என ஒருவாக்கு உண்டாயிற்று. அதனைக்கேட்டவுடன் வணிகன் நடுநடுங்கித் தான் பொருள் கொடுக்கவேண்டியது உண்மையே என்று ஒப்புக்கொண்டு வாருசியின் பொருள் முழுதையும் அவர் மனைவியிடத்தில் கொடுத்து தான் செய்தவற்றைப்பொறுத்தருள வேண்டும் என்றும் அரசன் கால்களில் விழுந்து மன்றாடினான். அரசன் அவனை மன்னித்து வீட்டிற்கு அனுப்பிவிட்டு, மிக்கவியப்புடன் அப்பெட்டியைத் திறக்கக்கட்டளையிட்டான். ஏவலர்கள் அப்பெட்டியைத்திறந்தவுடன் அதிலிருந்து இருளே உருவமெடுத்து வந்ததோ என்று கூறலாம் வண்ணம் மூவர் வெளிவந்தனர். அவர்களை யாவர் என்று அறிந்துகொள்வதற்கு அவர்களுடன் நெருங்கிப் பழகிய அரசன் அமைச்சர் முதலியவர்களுக்குமே முடியவில்லையென்றால் வேறு கூறுவதென்னுள்ளது. அரசன் முதலியவர்கள் அவர்களைச் சிறிதுபொழுது உற்றுநோக்கின பிற்கே யாவர் என்று அறிந்துகொண்டனர். அவர்களுடைய உருவத்தைக்கண்டு இகழ்ச்சியுடன் நகைத்தனர்.

பின்னர் அரசன் உபகோசையை நோக்கி, "கற்புள்ளவளே! இதேது" என்று வினவ, அவள் நடந்தவற்றை முழுதும் நன்றாக நவின்றாள். அரசன் அதனைக்கேட்டு அவள் செயலுக்கும் கற்புடைமைக்கும் மகிழ்ச்சியடைந்து அவளைத் தன்னுடன்பிறந்தவள்போலக்கருதி அவளுக்குத்தகுந்த மரியாதைகளைச்செய்து அவளுடைய வீட்டிற்கு அனுப்பிப் போற்றி வந்தான். இவ்வரலாறு முழுமையும் கேட்ட வர்ஷர் உபவர்ஷர் ஆகிய இருவரும்வந்து உபகோசையைப்பாராட்டி மகிழ்ந்தனர்.

இது நிற்க, அங்கே கைலைமலை சென்ற வாருசி அரிய தவமியற்றிப் பரமசிவனை யாராதித்தனர். அவருடைய தவத்திற்கு மகிழ்ந்த பரமசிவன் அவரெதிரில் தோன்றி, "அன்பனே! உனக்குச்சாஸ்திரங்கள் எல்லாம் தெளிவாய் விளங்கும்" என்று அருளிமறைந்தார். அதனால் அவ்வாருசி பாணினியினால் செய்யப்பட்ட வியாகரணத்துக்கு வார்த்திகம் என்பதோருரை யெழுதி அவ்வியாகரணத்தை நிறைந்த பரிபூரண முள்ளதாகச் செய்தருளினார்.

(தொடரும்)

பத்திராசிரியர்.

* சோழவரசர்கள்.

இவர்கள் சூரியகுலத்திலே தோன்றிய சிபிச்சக்கரவர்த்தியின் மரபினராதலால் இவர்களுக்குச் சைப்பியரென்ற பெயருமுண்டு அவர்களுள் முதன்மையானவன் சோழவர்மனெனப்படும் சூரதிராசன். இவன் உத்தரதேசத்திலிருந்து செங்கோல்செலுத்திய காலத்தில் ஒருநாள், தன்தேசத்திற்குத் தெற்கேயிருந்த காட்டில் சில பரிவாரங்களுடன் மான்வேட்டைக்குச் சென்ருன். அங்கே ரசனிசானெனப் பெயர் பூண்ட ஒருவன் புள்ளிமான் வடிவங்கொண்டு இவனெதிரே தோன்ற, இவன் அம்மானைத்துரத்திக்கொண்டு வெகுதூரம் தெற்கு நோக்கிச் சென்ருன். அது இவனைக் காவேரியின் வடகரையிலிருந்த காட்டுக்கிழுத்துச் சென்றுவிட்டது. உடன் வந்த பரிவாரங்களிற் பெரும் பகுதி வெகு தூரத்திற்கு வடக்கேயே நின்றுவிட, சிலவீரர் மாத்திரம் இவனைப் பின் தொடர்ந்தனர். அக்காட்டிற்குப் போனவுடன் அம்மான் மாயமுள்ள தென்றறிந்து கோபங்கொண்டு ஒருக்கிரமான அம்பையெய்து அதனைக்கொன்று வீழ்த்தினன்.

அப்பால் உடன்வந்த வீரருடனே சிறிது தூரம் காவேரிக்கரை வழியேசென்று ஒரு துறையைக்கண்டு அதிலிறங்கி நீராடிப்பசியாற்றிக்கொண்டு அவ்விடமெல்லாஞ் சுற்றிப்பார்த்தான். அந்தப்பிரதேசத்தில் அந்தணரொவரு மில்லாமைகண்டு, தன்னுட்டினின்றும் பல உயர்ந்த பிராமணர்களை வரவழைத்து, காடழித்து நாடாக்கிப் பல வளமும் ஓங்குமாறு செய்து அங்கே அவர்களைக் குடியேற்றினன். பின்பு தானும் அங்கேயே இருந்து அரசு செலுத்தவானுயினன். சோழவர்மனுலமைக்கப்பெற்ற காரணம்பற்றி அன்று முதல் அப்பிரதேசம் சோழமண்டலமெனப் பெயர் பெற்றது. இவனுக்குப்பின் இவன் மரபில்வந்த அரசரெல்லாருஞ் 'சோழர்' எனப்பட்டனர். இவனுக்குப்பின் இராசகேசரி என்பவன் தோன்றிச் சோழமண்டலத்தையாளத்தொடங்கினன்.

இராசகேசரி.

இவன் சோழ மண்டலத்திலிருந்துகொண்டு சம்பு, பிலட்சம், குசம், கிரௌஞ்சம், சாகம், சான்மலி, புட்கரம் என்னும் ஏழுபிரிவு

* இது, கலிங்கத்துப்பரணி 'இராசபாரம்பரியம்' என்னும் பகுதியைத் தழுவி எழுதப்பெறுவது.

களாகப் பிரிக்கப்பட்டிருந்த இப்பாதகண்ட முழுமையும் அரசாண்டான். சோழர்களுக்குப் புலிக்கொடி ஏற்படுத்தினவன் இவனே. இவனுக்குப்பின் பரகேசரியென்பவன் சிங்காசன மேறினன்.

பரகேசரி.

அவ்வாறு சிங்காசனமேறிய இவன்,இராசகேசரியால் ஏற்படுத்தப்பெற்ற புலிக்கொடியை யுடையவனுய், இப்பூமியை அவனினும் மிக்க சிறப்போடு ஆண்டுவந்தான். இவ்விருவரும் மிக்கபுகழ்பெற்று விளங்கினதனலே, இவர்களுக்குப் பின் பட்டத்திற்கு வந்தவர்களெல்லோரும் மாறிமாறித் தத்தம் பெயர்க்கு முன் 'இராசகேசரி' 'பரகேசரி' என்பவற்றைப்பட்டப் பெயர்களாகத் தரிக்கலானர்கள்.*

கிள்ளி வளவன்.

இவன் மேற்கூறிய பரகேசரிக்குப் பின்னே பட்டத்திற்குவந்தவன். கல்வி கேள்விகளில் மிகச்சிறந்தவன். இவன் காலத்தில் ஒரு பெரிய யாகம் நடந்தது. அந்த யாகத்திலே அவிர்ப்பாகம் பெறும் விஷயத்தில் யமனுக்கும் மற்றொருவருக்கும் வழக்குண்டாயிற்று. அவ்வழக்கில் இக்கிள்ளிவளவன் மத்தியஸ்தனுக ஏற்பட்டு விசாரிக்குமிடத்து யமனுடைய கட்சி சிறிது பல மற்றதாயிருந்தது. அதனை இவன் எடுத்துச் சொல்லவே யமனுக்குக் கோபமுண்டாகி இரைந்து கத்தினன். அதற்கிவ்வளவன் சிறிதும் பயப்படாமல் நூல்களிலிருந்து வேண்டிய ஆதாரங்களை யெடுத்துக்காட்டி, யாவரும் அங்கீகரிக்கும்படி செய்து அவ்வழக்கைத் தீர்த்துவைத்தான். இவனுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்தவன் காந்தன். இக்காந்தனுக்குச் 'சித்திரதன்வன்' என்னும் பெயரும் உண்டு.

காந்தன்.

இவன் காலத்திலே காவேரி இப்பொழுது ஓடுவதுபோல மாயூரத்தின் வழியேயோடிச் சமுத்திர சங்கமமாகாமல் மாயூரத்திற்கு வடக்கே ஒரு சிற்றுருக ஓடிக்கொண்டிருந்தது. அதனல் இவனது தலை நகராகிய சம்பாபதி நீர்வளமில்லாததாயிருந்தது. அது கண்ட

---

* இவ்வாறு தரித்திருப்பது சிலாசாஸன காலத்துக்குப் பின்னே நன்கு தெரிகிறது.

இவ் வேந்தன் வருந்தித் தன் குலதெய்வத்தைப் பிரார்த்தித்து, அத னருளாலே 'காவேரிநதியில் நீர்ப்பெருக்கை யதிகப்படுத்திக் கொணா லாம்' என்றறிந்து அதற்கு வேண்டிய வேலையாட்களுடன் மேற்கு நோக்கிச் சென்று குடகமலையையடைந்து அதனுச்சியிலுள்ள காவிரி யினுற்பத்தித் தானத்தைக் கண்டான். அங்கே யுண்டாகும் அருவி நீரிற் பெரும்பாகம் காவிரியாற்றிற் கலவாமல் வேறொரு பக்கமாக விழுந்து ஓடிக்கொண்டிருந்தது. அதுகண்ட காந்தன் தன்னுடன் வந்த ஆட்களைக்கொண்டு அம்மலைச் சிகரத்தை ஊடறுத்து அருவி களைத்திருப்பி நீர்முற்றும் காவிரியிற் கலக்கச்செய்து ஆற்றைப் பெரிதாக்கிக் கொணர்ந்து சம்பாபதி நகரின் பக்கத்தில் ஓடிக் கட லொடு கலக்கும்படி செய்தான். அன்றுமுதல் காவேரிநதியிற் பெருக்கு அதிகமாயிற்று; அந்நகரும் காவிரிப்பூம்பட்டினம் எனப் பெயர்பெற்றது. அரசனும் 'காவிரிப்புனல் கொணர்ந்தவன்' என்று அழைக்கப் பெற்றான். அப்பால் சுரகுரு* என்னும் சோழன் பட்டத் திற்கு வந்தான்.

சுரகுரு.

இவனுக்கு 'இராசேந்திரன்' என்ற பெயருமுண்டு. இவன் காவி ரிப்பூம் பட்டினத்தை விட்டுத் திருக்கழுக் குன்றத்திற்குக் கிழக்கே யிருந்தபட்டினமாகிய மகாபலி புரத்தைத் தலைநகராகக்கொண்டு செங்கோல் செலுத்துவானானான். இவன் துர்க்கையினிடத்து மிகவும் பக்திபூண்டு அத்தேவியினருளால் மன்னுயிரனைத்தையும் தன்னுயிர் போலப் பாதுகாத்து வருநாளில் ஒருநாள் தன்னுடைய ஆட் சிக்குட்பட்ட இடங்களிலுள்ள வுயிர்கள் யாவும் யமபயமற்று வாழ வேண்டுமென்னும் எண்ணம் இவனுக் குண்டாயிற்று. அதனால் தன்னெண்ணத்தை யமனுக்குத் தெரிவிப்பதற்காக ஒரு சுத்தவீரனை யவனிடம் தூதனுப்ப, அவ்வீரன், தான் புறப்படும்பொழுது (அரா வானைப்போன்ற) மற்றொரு சுத்தவீரனைக்காளிகோயிலுக்கழைத்துச் சென்று, தான் சயத்துடன் திரும்பிவர அருள் செய்ய வேண்டு மென்று பிரார்த்தித்து, அதற்குப் பலியாகத் தான் அழைத்துச்

---

*கலிங்கத்துப் பாணியின் 144, 163-ம் தாழிசைகளிற் கூறப்பெற்ற சுரகுரு இவனே.

சென்ற வீரனது தலையைக் கொய்து வைத்துவிட்டுச் சென்றான். திரும்பிவந்தபிறகு அத்தலையை யுடலோடு பொருத்தி அவ்வீரனைப் பிழைப்பித்துவிடலாமென்பது இவனது நம்பிக்கை. அதன்படியே சென்று காரியசித்தி பெற்றுத் திரும்பிவந்து பார்த்தபொழுது தான் துணித்துவைத்த தலையைக் காணவில்லை. அதனால் மனம்வருந்தி நடந்த விருத்தாந்தத்தை அரசனுக்குத் தெரிவிக்க, அரசன் கோபங்கொண்டு கோயிலுக்குப்போய்க் காளிதேவியைப் பிரார்த்தித்தான். உடனே அத்தேவி பிரசந்நமாகித் தன் பரிவாரப் பேய்களையெல்லாம் அழைத்து விசாரித்து, அவற்றுள்ஒன்று இத்தலையைத்திருடித்தின்றதாக அறிந்து அப்பேயின் சிரத்தையறுத்து வீரனுடலிற் பொருத்தி அவனைப்பிழைப்பித்தாள். அதுமுதல் சுரகுருவின் ஆட்சிக்கால முழுதும் சோழராச்சியத்தில் உயிர்களெல்லாம் யமபயமற்று வாழ்ந்து வந்தன. அரசனும் மிருத்தியுவைச் சயித்ததனாலே 'இராஜேந்திர மிருத்யுஜித்' என்னும் சிறப்புப் பெயரைப்பெற்று நெடுநாள் வாழ்ந்தான். இவனுக்கப்பால் இராச்சியபாரம்பூண்டவன் சித்திரன் அல்லது சித்திரதன் எனப்படுவான்.

சித்திரன்.

இவன்றன் வீரத்திற்கு அஞ்சி ஒரு காலத்தில் இந்திரனே இவனிடம்வந்து புலியுருக்கொண்டு இவன் கொடியிலிருந்து விளங்கினான். அதுமுதல் இவனுக்கு 'வியாக்கிரகேது'என்னும் பெயருண்டாயிற்று. இவன் காலத்திற்குப் பிறகு 'ஸமுத்திரஜித்' என்பவன் அரசாண்டான். (தொடரும்.)

அ. கோபாலையர்.

திருஞானசம்பந்தர்.

(15-ம் பக்கத்தொடர்ச்சி.)

சோழநாட்டில் சீகாழிப்பதியிலே பிராமணர் குலத்திலே அவதாரம்செய்து, மூன்றாம் ஆண்டில் சிவபெருமானால் ஆளப்பெற்று, அம்மை திருமுலைப்பாலுண்டு சிவஞானம்பெற்ற செல்வக்குமாராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் வேதாரண்ணியத்தில் எழுந்

தருளியிருக்கின்றார் என்ற வரலாற்றைக்கேள்வியுற்ற மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும், அவரை உடனே பாண்டிநாட்டிற் கழைத்துவரும்படி சில வேதியர்களை அனுப்பினார்கள். அவர்களும் விரைந்து வேதாரண்ணியத்தைச் சென்றடைந்து ஞானசம்பந்தப் பெருமானைக்கண்டு உள்ள செயல் அனைத்தையும் விண்ணப்பித்தார்கள். காழியர் பெருமான், மதயானைகள்மீது பாயவெழும் சிங்கக் குட்டியேபோல எழுந்து பாண்டியநாட்டிற்குக் கடுகிவந்து சைவசமயத்தை நாட்டவேண்டுமெனப் புறப்பட்டார். அப்பொழுது உடன் இருந்த திருநாவுக்கரசர் சமணர்களின் வஞ்சகச்செயல்களை யெடுத்தோதி, "ஸ்வாமி! தேவரீர் பாலர்; அன்னார் அறக்கொடியவர். தங்களுக்குக்காலம் இப்பொழுது நன்றாயில்லை. போகவேண்டாம்" எனத் தடுத்தார். பிள்ளையார் கேட்டுச்சிறிதும் அஞ்சாது, "சிவபெருமான் நம் சிந்தையிற் குடிகொண்டிருக்கும்போது நமக்கேது இன்னல்?" எனக்கூறி, "வேயுறு தோளிபங்கன்" எனும் கோளறுபதிகத்தைப் பாடிக்கொண்டு பாண்டிநாட்டுக்குப்பயணமானார்.

பாற்கடல் மத்தியிற் பனிமதியொன்றெழுந்ததேபோல வெண்ணீற்றின் விளக்கமுடைய மேனிகொண்ட அடியார் திருக்கூட்டத்தின் நடுவண் ஞானசம்பந்தப்பெருமான் முத்துச்சிவிகையின் மீதிவர்ந்து வேத முழக்கொலியும், மெய்யடியார் வாழ்த்தொலியும் கடலொலிபோல் முழங்க மதுரைக்குச்சமீபம் வந்தடைந்தார். பாண்டி நாட்டில் ஆனைமலை முதலாயுள்ள மலைகளில் வசித்த சமணர்கள் எல்லாம் தீயகனுக்களைக்கண்டு "என்ன விளையுமோ" என்று அஞ்சி நின்றார்கள். மங்கையர்க்கரசியார் ஞானசம்பந்தப்பெருமானை எதிர் சென்றழைத்துவர மந்திரியாராகிய குலச்சிறை நாயனாரை அனுப்பினார். அவரும்சென்று வணங்கி எதிர்கொண்டழைக்க ஆளுடைய பிள்ளையார்குலச்சிறையாரை "மதுரை எங்குளது?" என வினவினர். அவர் "இதுதான் மதுரை" என்றுகோபுரத்தைக்காட்ட உடனே ஞானசம்பந்தப்பெருமான் சிவிகையினின்றும் கீழேகுதித்து வணங்கி எழுந்து நின்று மங்கையர்க்கரசியாருடையவும், குலச்சியாருடையவும் பணியைச் சிறப்பித்து "மங்கையர்க்கரசி" எனும் பதிகத்தைப் பாடினார். நகரினுள் வரலும் ஞானசம்பந்தப் பெருமானுக்கு மந்திரியார் மங்கையர்க்கரசியாரைக்காட்ட அவரும்கண்டு வாழ்த்தினர். அவர் கோயிலை

வலஞ்செய்துகொண்டு மந்திரியார் ஓர் மடத்தைக்காட்ட அதில் எழுந்தருளியிருந்தார்.

சமணர்கள் தங்களுக்கு ஏற்பட்ட கெட்ட நிமித்தங்களாலும் வேதச் சிறுவர் அங்கு வந்திருப்பதாலும் தங்கள் சமயத்துக்கும் தங்களுக்கும் பெருந்தீங்கு விளையுமென்றுன்னி அவரை வஞ்சனையால் ஒழித்துவிட வேண்டுமென நினைந்து அவர்கள் ஒன்றுகூடி அரசன்பால் போய்ச் சேர்ந்தார்கள். மன்னன் அவர்களைக்கண்டு "யாது விசேஷம்?" எனக்கேட்க அவர்கள் "நின் அரசாட்சிக்கும், நம்சமயத்துக்கும் பெருந்தீங்கை விளைவிப்பதற்காக வேதச்சிறுவன் ஒருவன் இங்கு வந்துளான். அவன் தங்கியிருக்கும் மடத்தை எங்கள் மந்திர பலத்தால் எரித்துவிடுகின்றோம். அதற்கு அனுமதி கொடுக்க வேண்டும்" என்று வேண்டினார்கள். மன்னன் அவர்கள் வஞ்சனையையுணராது அவர்கள் கூற்றை மெய்யென நம்பி அவர்களைக் "கூடுமேல்செய்யுங்கள்" எனக்கட்டளையிட்டான். சமணர்கள் சென்று தங்களாலியன்றவரை மந்திரித்துப் பார்த்தார்கள். ஒன்றும் முடியாமற் போகவே அவர்கள் "மன்னவன் அறிவானாயின் நம்மை யொறுப்பான்" என்வெண்ணித் தாங்களே நெருப்பை யொருவருக்கும் தெரியாது கொண்டுபோய்க் கொளுத்தினார்கள். மடம்பற்றி யெரிவதைக் கண்ட அடியார்கள் திருஞான சம்பந்தர்பாற் சென்று தெரிவித்தார்கள். அது பாண்டியனால் நேர்ந்ததெனத் திருவருளால் உணர்ந்தபிள்ளையார் அத்தீயை "பையவே சென்று பாண்டியற்காகவே" எனப்பாடினார். அத்தீயனைத்தும் ஒன்றுகூடிப் பாண்டியனிடம் சுரநோயாகப் போய்ப்பற்றியது. 'பிள்ளையார்மடத்தில் நெருப்புப்பற்றியது' எனக்கேட்ட மங்கையர்க்கரசியார் பதறியோடிவந்து பார்க்க ஒன்றும் கெடுதியிலை யெனவறிந்து மகிழ்ந்தார்.

அதே சமயம் பாண்டியன் சுரநோயால் பீடிக்கப்பட்டு மிகவும் வருந்துகின்றானென மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் கேட்டு மிகவும் உளமாழ்கினார்கள். தக்க பண்டிதர்களைக் கொண்டு வேண்டிய சிகிச்சை செய்து பார்த்தார்கள். ஒன்றாலும் குணப்படவில்லை. நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டேவந்தது. சமணர்கள் தங்களுக்குக்கைவந்தமந்திரங்களால் மந்திரித்துப் பார்த்தார்கள். ஓயாது மயில்தோகையால் தடவினார்கள், கமண்டலத்திலுள்ளநீரை

மந்திரித்துத் தெளித்தார்கள். இவர்கள் இவ்வாறு செய்யச்செய்யச் சுரவேகம் அதிகரித்ததேயல்லாது கொஞ்சமுங்குணமாகவில்லை. மன்னனே சுரமிகுதியால் வாடினன். வாடிவருந்தினன். மெய்பதறியாடினன். தூங்கும் அமளியை விட்டோடினன். இவ்வாறு அரசன் வருந்துவதைக்கண்ட மங்கையர்க்கரசியாரும், மந்திரியாரும் இது சமணர்செய்த அக்கிரமத்தால் நேர்ந்ததெனவுணர்ந்து அரசனிடம் சார்ந்து "அரசே! திருஞான சம்பந்தர் எனப்பெயரிய பெரியார் ஒருவர் இங்கெய்தியுள்ளார். அவர்கைபட்டாற் போதும். இந்நோய் நீங்கிவிடும். அவரை அழைத்துவர அனுமதிகொடுப்பீராயின் அழைத்துவருகின்றோம்." எனவேண்டி நின்றார்கள். அரசன் தன்னைச் சூழ்ந்துள்ள சமணர்களால் ஏதும் நன்மை விளைந்தில தெனவுணர்ந்து அழைத்துவரக் கட்டளையிட்டான். அவர்களிருவரும் நாட்டிற்கே நன்மையுண்டாயிற்றென நிச்சயித்து பிள்ளையார் இருக்கும் திருமடத்துக்குச் சென்று வேண்ட, ஸ்வாமி "அரசனுக்கு ஏதும் தீங்குண்டோ?" எனவினவ, அவர்களும் உள்ளதையுரைத்து எழுந்தருளுமாறு வேண்டினார்கள்.

"அரசன் சுரத்தைத்தணிக்கச்சென்றால் சமணர்கள் கட்டாயம் வாதுக்கு வருவார்கள். அவர்களுடன் வாதாடத்தான் வேண்டிவரும் திருவுளச்சம்மதமோ?" என்று ஆலவாய்ப்பெருமானை வேண்டி வணங்கித் திருவருளையே துணையாகக்கொண்டு திருஞான சம்பந்தர் மன்னன் அரண்மனைக்குக் கடல்புரண்டு வருவதென அடியார் கூட்டம் சூழ்ந்து வரவும், திருச்சின்னம் முதலாயுள்ள வாத்தியங்கள் "ஜயம் ஜயம்!" என்று ஒலிக்கவும் முத்துச்சிவிகைமீதிவர்ந்து வருவாராயினர். குலச்சிறையார் முன்னரே விரைந்தேகி மன்னனுக்கறிவித்து அரசன் தலைமாட்டோர் இரத்தின சிங்காதனம் இடுவித்து ஸ்வாமிகள் வரவை எதிர்பார்த்திருந்தார். ஸ்வாமிகள் அரண்மனை வாயில் வந்தடையவும் மந்திரியாரும் மங்கையர்க்கரசியாரும் எதிர்கொண்டு வணங்கி உள்ளே அழைத்துச் சென்றார்கள்.

திருஞானசம்பந்தர் அடியார்திருக்கூட்டத்துடன் அரண்மனைக்குள் புகுந்து அரசனிருக்குமிடம் வந்தடைந்தார். அரசன் பிள்ளையார் திருமேனிப் பொலிவைக்கண்டு எழுந்திருக்க முடியாதிருந்தமையால்

படுத்தபடியே இரண்டு கரங்களும் சிரமீதேறிக்குவிய வணங்கினன்; பிள்ளையார் ஆங்குள்ள பெருமணியாசனத்தில் எழுந்தருளியிருந்தார். ஞானசம்பந்தப் பெருமானைச் சமணர்கள்கண்டு பயந்து தங்களுடைய பொய்ச்சமயம் தொலையக் காலம் வந்துவிட்டதெனத் தீர்மானித்து மன்னனிடம் இரகசியமாக "இவ்வேதியரால் சுரம் நீங்குமாயினும் யாங்களும்சேர்ந்து தீர்த்தோமெனச் சொல்லவேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்கள். மன்னவன் மிகவும் அயர்ந்து "யார் என் சுரத்தை நீக்கவல்லாரோ அவர் சமயமே சற்சமயம்" என்றான். சமணர்கள் கேட்டு ஒன்றும் வழிதெரியாது செத்தாற்போலிருந்தார்கள். தமிழ்நாடு செய்ததவமே யோர் உருவெடுத்து வந்தாற்போன்றவராகிய ஞானசம்பந்தப் பெருமானை மன்னவன் மிகவும் வணக்கத்துடன் "தேவரீர் ஊர் எதுவோ?" என வினவினன். அவர் "பிரமனூர் முதலாயுள்ள பன்னிரண்டு திருநாமங்களையுடைய சீகாழிப்பதியே நம்பதியாகும்" எனப் பைந்தமிழினால் பதிகம்பாடியருளினர். காலைக் கதிரவனைக் கார்மேகங்கள் சூழ்ந்திருப்பனபோல ஞானசூரியரைச் சமணர்கள் சூழ்ந்து நின்றுகொண்டு ஆரவாரிக்க மங்கையர்க்கரசியார் "பாலராயிற்றே" என அஞ்சியதைக்கண்ட திருஞானசம்பந்தர் "மானினேர்விழி மாதராய்! நீலமிடற்றூரிருக்க நிற்கேன்பயம்?" என்றுரைத்தருளினர்.

பாண்டியன் அவரவர்களின் வல்லமையைக் காணும்பொருட்டுத் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரை யொருபுறமும், சமணர்களை யொருபுறமும் பார்க்கும்படி கேட்டுக்கொண்டான். அதன்படியே இருதிறத்தாரும் இணங்கிச் சமணர்கள் "யாங்கள் இடப்பாகத்தைப் பார்க்கின்றோம். வேதச்சிறுவர் வலப்பாகத்தைப்பார்க்கட்டும்" என்றார்கள். அவ்வாறே சமணர்கள் தங்களாலியன்றவரை இடப்பாகத்தை மந்திரித்துப் பார்த்தார்கள். ஒன்றும் பயன்படவில்லை. அரசன் மிகவும் வருத்தமுற்று நோயின் கொடுமையைச் சகிக்கலாற்றாது வணங்கிப் பிள்ளையார் திருமுகத்தைப் பார்க்க உடனே அவர் திருநீற்றை யெடுத்துத் திருநீற்றுப் பதிகத்தையோதி மன்னனுடைய உடலில் வலப்பாகம் முழுவதும் பூசினர். அவ்வளவிலே அப்பாகம் பொய்கைப் புனல்போற் குளிர்ந்தது. இடப்புறத்திலோ முன்னையினும் சுரம் அதிகரித்து இரண்டுபங்காகக் காய்ந்தது. சமணர்கள்

தங்களாற் கூடியவரை பார்த்தார்கள். கொஞ்சமும் குணப்படவில்லை. கொற்றவன், அப்பாகத்தையும் குணப்படுத்தவேண்டுமெனப் பிள்ளையாரைப்பிரார்த்திக்க, அவர் அப்பாகத்திலும் திருநீற்றைப்பூசியருளச்சுரமும் தணிந்தது. உடனே பாண்டியன் படுக்கைவிட்டெழுந்து ஸ்வாமிகள் உபயசாரணாரவிந்தங்களில் நமஸ்கரித்தெழுந்து நின்று,

"நாயடியேன் முன்செய்த நற்றவமே போல்வந்த
தூய மணியே சுடர்க்கொழுந்தே—தீயசமண்
அந்தகா ரத்தை யகற்றும் பெருங்கதிரே
சுந்தரா நீயே சரண்"

எனவாழ்த்தினன். சமணர்கள் முகம்கரிந்து பிள்ளையாருடைய வாக்கின் வலியைக்கண்டு பயந்து "இவரை வாதால்வெல்ல முடியாது. நீராலும் நெருப்பாலும் வெல்லவேண்டும்" எனத் தீர்மானித்தார்கள்.

ஞானசம்பந்தப்பெருமான் சமணர்களை "இனி உங்கள் வாதம் யாது? கூறுங்கள்" எனக்கேட்க அவர்கள் "யாம் இனிக் காட்சிப் பிரமாணத்தால் வெல்வேம்" என்றார்கள். அரசன் கேட்டு "என் சுரத்தைத் தீர்க்கமுடியாது தோற்ற உங்களுக்கு இனி என்னவாதம் வேண்டியிருக்கிறது? எனக்கடிந்து பேசினன். அப்பொழுது சமணர்கள் "அரசே! ஏதோ ஒன்றில் யாம் இளைத்துவிட்டோம் என அவ்வாறு கழறலாகாது. அவரவர்களுடைய சமயத்திலுள்ள உண்மையை ஏட்டில் எழுதி அக்கினியில் இடல்வேண்டும். எவ்வேடு வேகாமலிருக்கின்றதோ அதுவே சற்சமயம்." என்றார்கள். அதற்குத் திருஞானசம்பந்தரும் இணங்கினர். அதன்படி அரசன் நெருப்பை உண்டாக்க ஆணையிட்டான். நெருப்பும் சித்தமாயிற்று. பலரும் அவ்வேடிக்கை காண்பான் வந்து கூடினர். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் சிவபெருமானே உண்மைப் பொருளெனத் துணிந்து, தாம் பாடிய தேவார ஏட்டில் கயிறுசாத்தியெடுக்க, அதில் 'போகமார்த்த' என்ற அடியையுடைய திருநள்ளாற்றுப் பதிகம் வந்தது. அதனையெடுத்துப் பரமசிவனை வணங்கித் துதித்து அக்கினியில் இட்டனர். அவ்வேடு அவ்வக்கினியில் வேவாது பசும்பொன்னேபோல விளங்கிற்று. சமணர்கள் தங்கள் சமயத்துணிபை யெழுதி "இவ்வேடும் வேவாது நிற்குமோ?" என ஐயுற்றே அக்கினியிலிட்டார்கள்.

உடனே அவ்வேடு அக்கினியிற்பட்ட பஞ்செனத்தீய்ந்தது. சமணர் கள் கண்டு வாடி நின்றார்கள். சிறிது நேரங்கழித்துத் திருஞான சமபந்தர் தாம் அக்கினியிலிட்ட ஏட்டை எடுத்து மன்னனும் மற்று மங்குள்ளாரும் காணக் காட்டினர். அது முன்னையிலும் பசுமையாய் விளங்கக்கண்டு சகலரும் மகிழ்ந்தார்கள். அரசன் சமணர்களைப் பார்த்து "நீங்களிட்ட ஏட்டை எடுங்கள்" என அவர்கள் அக்கினி யில் தேடிப்பார்க்கக் கரியும் சாம்பலுமே கண்டார்களன்றி ஏட் டைக் கண்டார்களில்லை; அவர்கள் மனமுடைந்து வாடியிருந்தார்கள்.

அரசன் அவர்களை "முன் இரண்டுமுறையும் தோல்வியடைந் தீர்கள். இனியேன் பேச்சு?" என அவர்கள் "மன்னு எதையும் மும் முறையும் பரீக்ஷிக்கவேண்டும். இன்னு மொருமுறை கடைசியாகப் பார்க்க அனுமதி கொடுக்கவேண்டும்" என்றிரந்தார்கள். ஞானசம்பந் தப் பெருமான் சமணர்களை "இனி உங்கள் வாதும்யாது?" என அவர்கள் "அவரவர் மதத்தினுண்மையை ஏட்டிலெழுதி ஓடும் நீரில் இடுதல்வேண்டும். யார் இட்டஏடு எதிர்த்துச் செல்கின்றதோ அவர் மதமே சன்மதம்" என்றார்கள். மந்திரியார் "இம்முறையும் நீங்கள் தோல்வியடைவீராயின் உங்களுக்குஇடும் தண்டம் யாது?" என வின வினர். அவர்கள் "யாங்கள் இம்முறையும் தோற்றால் கழுவேறிமாய் வோம்" என்றார்கள். உடனே ஞானசம்பந்தப் பெருமான் மன்னன் முதலானவர்களை உடனழைத்துக்கொண்டு வையைக்கரை வந்தார். சமணர்களும் தங்களைச் சார்ந்தவர்களுடன் அங்குவந்து சேர்ந்தார் கள். பலரும் இவ்வதிசயங்காண்பான் ஆண்டுவந் தீண்டினர்.

சமணர்கள் "அத்திநாத்தி" என ஓர் ஏட்டிலெழுதி வையை யாற்றிலிட்டார்கள். அது ஆற்றுவேகத்தினும் கடியவேகத்துடன் கடல்போயடைந்தது. அது "நீங்களும் இவ்வாறே மாள்வீர்" என முன்னறிவிப்பதேபோல முந்நீரிற்போய் மாண்டது. இவ்விவாதத்தை ஞானசம்பந்தப் பெருமானுக்கும் மன்னனுக்கும் அறிவித்தார்கள். மன்னன் ஞானசம்பந்தப் பெருமானுடைய திருமுகத்தைப் பார்க்க, அவர் நம் தமிழ்நாடும், பிறநாடும் உய்யவும், வேதநெறி தழைத் தோங்கவும், சைவத்துறை விளங்கவும்,

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

என்னும் திருப்பாசுரத்தை யெழுதி வையையாற்றில்இட்டனர். அவ்வேடு நீரைக்கிழித்துக்கொண்டு மேலே யெதிர்த்தேறிச் சென்றது. இதுகண்ட தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். அடியார்கள் கண்டு ஆநந்தக் கூத்தாடினார்கள். அப்பாசுரத்தில் "வேந்தனு மோங்குக" எனக்கூறிய பெற்றியால் மன்னவன்கூன் நிமிர்ந்தது. ஏடுமேலேறிச் சென்றுகொண்டே போக அதனை நிறுத்தும் பொருட்டுத் திருஞான சம்பந்தர் ஓர் தேவாரப்பதிகம் பாடினார். அது அவ்வாறே திருவேட்க மென்னும் தலத்தில் நீர்ச்சுழியவில் நின்றுகொண்டிருந்தது. அதை மந்திரியார் வேகமாப்பரியேறிச் சென்றெடுத்து வந்து சுவாமிகள்பாற் கொடுத்தார். இது கண்ட பலரும் மகிழ்ந்தார்கள்.

பிறகு பாண்டியன் "இச் சமணர்கள் பிள்ளையார்பால் முன் அநுசிதம் செய்தவர்களாதலால் அவர்களைக் கழுவேற்றுவதற்கு வேண்டுவனசெய்க" என்றாணையிட்டான். ஞானசம்பந்தப்பெருமான் மகாஜீவகாருண்ணிய முள்ளவராக விருந்தும் அச்சமணர்கள் சைவர் இருந்துவாழ் மடத்தில் தீது செய்ததன்மையால் அவர்களைக் கொல்லுதல் முறையேயாகுமென வாளாவிருந்தனர். குலச்சிறையாரும் மன்னவனாணைப்படி எண்ணாயிரம் கழுமரங்களை நாட்டினார். அதிற் சமணர்களுமேறி இறந்தார்கள். சைவத்தில் அபிமான முடையவர்களெல்லாம் ஸ்வாமிகளிடம் திருநீறு வாங்கியணிந்து சைவரானார்கள். அன்று தொட்டு பாண்டிய நாட்டிலே சமண அந்தகார மொழிந்து சைவ வொளி பரவியது.

திருஞான சம்பந்தர் மதுரையில் எழுந்தருளியிருக்கும்பொழுது அன்னார் வெற்றியைக் கேள்வியுற்ற திருநாவுக்கரசு நாயனாரும், சிவ பாதஹிருதயரும் பிள்ளையாரைப் பார்க்க வந்தார்கள். அவர்களுக்கு வேண்டிய உபசாரம் செய்து அனுப்பினார். பிறகு திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் பாண்டிய நாட்டில் திருப்பரங்குன்றம் முதலாகவுள்ள

சிவக்ஷேத்திரங்களைத் தரிசிக்கவேண்டிப் புறப்பட்டார். பாண்டியனும் குலச்சிறையாரும் பின்பற்றிவர அவர்களோடு சிலதலங்களுக்குச் சென்று தரிசித்துக்கொண்டுஅவர்களை மதுரையிற்போய் நீதியாயிருந்து நாட்டைப் புரந்து வரும்படி அனுப்பினார். அவர்களும் அவ்வாறே சென்றார்கள்.

பிள்ளையார் பாண்டி நாட்டுத் தலங்களையெல்லாம் தரிசித்துக் கொண்டு சோழ நாட்டிற்கு வந்து சேர்ந்தார். திருமுள்ளிவாய்க் கரையை வந்தடைய ஆங்கு நதியில் இருகரையும் ஒரு கரையாய் வெள்ளம் பெருகியோடியது. அக்கரைக்குப்போக வேண்டிப் பிள்ளையார் ஓடக்காரர்களைக்கேட்க அவர்கள் வெள்ளப் பெருக்குக் கஞ்சி ஓடம்விடமுடியாதென வோதினார்கள். திருஞானசம்பந்தர் ஓடங்களைக் கொணரச்செய்து அவற்றில் தாமும் அடியார்களுமேறிக் கொண்டு நாவலமே கோலாகக்கொண்டு ஓட்டி அக்கரைபோய்ச் சேர்ந்தார். ஆங்கு இறைவனை வணங்கித் தமிழ்ப்பதிகம் பாடித் திருநள்ளாற்றையடைந்து சிவபெருமானை வழிபட்டுப் பூதமங்கை யெனும் தலத்தைவந்தடைந்தார். அவ்வூரில் சின்னமுதலாயுள்ள வாத்தியங்கள் ஒலிக்கவும், அடியார்கள் அரகர வென்ன வாழ்த்தவும், குடை முதலாயுள்ள விருதுகளுடன் திருஞானசம்பந்தர்வரும்போது புத்தர் சிலர் சென்று தடுத்துத்தங்கள் தலைவனான நந்திப்புத்தனிடம் தெரிவித்தார்கள்.

அவன் கேட்டு மிகுந்த சினத்துடண் எதிர்வந்து "உங்களுக்கு இவ்விருதுகள் யாரால் அளிக்கப்பெற்றன? என்ன வெற்றியை நீங்கள் அடைந்து விட்டீர்கள்? எம்மை வென்றால். அல்லவோ நீங்கள் இவ்வெற்றி விருதுகளைக் கொள்ளலாம். அன்றேல் இவை வெற்று விருதுகள் ஆகாவோ?" என்ன இழித்துப் பேசினான். இது கேட்ட அடியார்கள் ஞானசம்பந்தரிடம் அறிவிக்க அவர் "அவன் தலை தத்தக்கடவது" என நினைக்க உடனே அவன் தலையில் வெள்ளிடி விழ இறந்தான். கண்ட மற்றையப் புத்தர்கள் வெருண்டு ஞானசம்பந்தருடைய திருவடிகளில் வந்து விழுந்து "மன்னித்தருள வேண்டும்" என்றிரந்தார்கள். அவர்கள் உடனே சைவராகிக் காழி வள்ளலாருக்கு அடிமையானார்கள். பிறகு ஞானசம்பந்தர் திருக்கடையூர் வந்தடைந்தார். (தொடரும்)

கோவிந்தசாமி ஐயர்.

வைத்தியக்குறிப்பு.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்குவித புருஷார்த்தங்களையும், இலகுவில் அடையவல்லதான நீண்ட ஆயுளையும், திடசரீரத்தையும், புத்திபலத்தையும் விரும்புகிறவன் ஆயுர் வேத நூல்களில் மிகவும் ஆதாவுள்ளவனாக விருக்கவேண்டிய தவசியமாயிருக்கிறது.

சுருதி, யுக்தி, அனுபவத்தைக் கொண்டு எனது சிற்றறிவிற்கு எட்டியவாறு பற்பல ரோகங்களில் பன்முறையும் நற்பயன் அளித்திருப்பதானமுறைகளையேஎல்லோருக்கும் பயன்படுமாறுஇச்சஞ்சிகை வாயிலாக வெளியிடத்துணிந்திருப்பதில், இதிலுள்ள குற்றங்களைந்து குணத்தை மட்டும் கிரகித்துக்கொள்ள வேண்டுமாய்க் கற்றோர்களை மிகவும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆயுர் வேதமானது ஆதியில் பிர்மாவினால் கையாளப்பட்டுஅவர் தக்ஷனுக்கு உபதேசித்துத்தக்ஷனால் அஸ்வினி தேவர்களுக்கும் அஸ்வினி தேவர்களால் இந்திரனுக்கும் இந்திரனால் மகரிஷிகளுக்குமாக உபதேச பாம்பரையில் வந்ததெனத் தெரிகிறது.

பிறகு ஒவ்வொரு மகரிஷிகளாலும் தனித்தனியாக அநேக வைத்திய கிரந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றுள் சிகித்ஸா முறைகள் காயசிகித்ஸை, சஸ்திர சிகித்ஸை என இரண்டு விதங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

தற்காலம் ஆயுர்வேத வைத்தியர்களிடம் சஸ்திர சிகித்ஸை அனுஷ்டானத்தில் இல்லாவிட்டாலும் உத்தமமான அநேக மூலிகைகள் தாதுவர்க்கங்கள் இவைகளைக்கொண்டு அநேக யோகங்களைச் செய்து பற்பலரோகங்களை சொஸ்தம் செய்வதின்மூலம் காய சிகித்ஸை மட்டும் செய்து வருகிறார்கள் என்பது மறுக்க முடியாத விஷயம்.

வைத்தியன் ரோகிகளுக்குண்டாகும் ஸகல வியாதிகளையும் வியாதி உண்டானதிற்கு சரியான காரணத்தையும், வியாதியின்உபத்திரவத்தையும் வியாதி சாந்தமாவதற்கு ஏற்ற வழியையும் தெரிந்துகொள்ள வேண்டியதுடன் தேக, தேச, கால பேதங்களையும் ஔஷதங்களின் பிரபாவங்களையும் ஒருமுறைக்கு இரண்டு முறையாக நன்கு கவனித்துத் தெரிந்துகொண்ட பிறகுதான் சிகித்ஸைசெய்ய முன்வர

வேண்டும். இல்லாவிட்டால் எவ்வளவு புத்திசாலியான வைத்திய னும் நிச்சயமாக ஏமாந்துவிடக் கூடுமென்பதில் சந்தேகமில்லை. மேற் கண்டபடி விஷயங்களை ஐயமறத் தெரிந்துகொண்ட வைத்தியன் முறைப்படி தயாரித்த ஔஷதங்களைக் கொண்டு சிகித்ஸை செய்யத் தொடங்கினால் அநேகமாக சொஸ்தமாகாத வியாதிகளே இல்லையென் றும் சொல்லலாம்.

மேலும் நமது பூர்வீக சாஸ்திரங்களைக் கொஞ்சமும் கௌரவிக் காத இக்காலத்தில் சாஸ்திரத்தை அநுசரித்து நடந்துவர வேண்டு மென்று சொல்லுவது செவிடன் காதில் சங்கு ஊதியதாகும். ஆனா லும் சாஸ்திரப்படி தினம் நடந்து வருவார்களானால் சரீரத்திற்கு வியாதியே வராமல் தடுத்துக்கொள்ளுவதுடன் எப்பொழுதும் பூர்ண ஆரோக்கிய நிலைமையிலும் இருக்கலாம். ஆகையால் சதுர்வித புரு ஷார்த்தங்களையும் அடைய விரும்பும் ஒருவன் ஒவ்வொரு நாளும் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்பதையே முதலாவதாக இங்கு வெளியிட வேண்டுவது அவசியமாக இருக்கிறது.

ஆரோக்கிய நிலையிலுள்ள ஒவ்வொருவனும் காலையில் 4-மணிக்கு மேல் 5-மணிக்குள்ளாக படுக்கையிலிருந்து எழுந்திருக்க வேண்டும். பிறகு சரீர உபாதைகளை நிவிர்த்தி செய்துகொண்டு ஆல், நாயுருவி, வேம்பு, கருவேல், பூலா, மருது முதலானவற்றின் குச்சிகளில் ஒன் றினால் பல்லீறுகளுக்குக் கெடுதல் ஏற்படாவண்ணம் பற்களை நன்குதுலக்கி வெந்நீரினால் வாயைக் கொப்பளிக்க வேண்டும். நம்மிட மிருக்கும் பற்பொடியினால் பல் துலக்கிவந்தால் பற்களிலுள்ள அநேக வியாதிகளை சொஸ்தம் செய்வதுடன் பற்களுக்கு வலுவை யும் காந்தியையும் கொடுக்கும். பிறகு அவரவர்களுடைய இஷ்ட தெய்வப்பிரார்த்தனை செய்துகொண்டு, சரீரபலத்திற்குத் தகுந்த வாறு, தேகப் பயிற்சி செய்யவேண்டும். தினம் அப்யங்கனம் செய்துகொள்ள வேண்டியதவசியம். அதனால் சரீரத்திற்கு வலுவை யும் பூரண ஆயுளையும் மூளை, கண் இவைகளுக்குக் குளிர்ச்சியையும் தெளிவையும் கொடுப்பதுடன் நல்ல நித்திரையும் உண்டாகும். அப் யங்கனத்திற்கு நமது சஞ்சீவித்தைலம் சாலச்சிறந்ததாகும்.

(தொடரும்.)

C. R. S. ராகவய்யங்கார்.

ஆயுர்வேத டாக்டர், மதுரை.

புகையிலை.

புகையிலை, நமது நாட்டிலமைந்த விளைபொருள்களிலொன்றல்லவென்பதும் காலத்திற்கேற்க நாட்டில் நுழைந்து மக்களை மயக்கி வாட்டி வருகின்ற ஓர் நச்சுப்பூண்டென்பதும் அறிந்துகொள்ளத் தக்கதாம்.

இது ஆதியில் சிவப்பு மனிதன் உபயோகத்திலிருந்தது. பின்பு வெள்ளை மனிதன் கைக்கொண்டான். வெள்ளை மனிதனிடம் கறுப்பு மனிதன் பெற்றான். கடைசியில் மஞ்சள் மனிதனும் சொந்தமாக்கிக் கொண்டான். இங்குக்கூறிய நிறவேற்றுமையான மனிதர்களைத்தவிர வேறு மனிதர்கள் உலகிற்காணமுடியாததலால் கண்டங்கள் ஆறினும் தீவுகளினுமுள்ள மனிதவர்க்கத்தாரனைவருமே புகையிலையை ஓர் ஒப்பற்ற பொருளாகக்கொண்டு சுமார் நானூறு வருடங்களுக்குள்ளாக நாளுக்கு நாள் ஏற்றம் பெறச்செய்து தற்போது முன்னணியிற்கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார்கள் என்று புலனாகிறது.

ஏனெனில், சிறிது காலமாகப் புகையிலை வருடந்தோறும் சுமார் அறுபத்துமூன்றுகோடி ரூபாய்க்கு விற்பனையாகி வருகின்றதென்று அறியப்படுகிறது. அன்றியும் உலகத்திலுள்ள ஏறக்குறைய நூற்றைம்பதுகோடி ஜனங்களில் அறுபதுகோடி பேருக்கதிகமாகவே இந்தப் புகையிலையைப் பின்பற்றி மயக்கேறி அடிமையாகிவிட்டதாகவும் தெளிவாகத் தெரியவருகிறது. இதன் முற்போக்கைக் கவனித்தால் இன்னும் சில வருடங்களுக்குள்ளே மனிதவர்க்கம் முழுவதுமே புகையிலை வர்க்கத்தார் என்னும் பட்டதாரிகளாய்ச்செயலற்ற யாக்கையோடு உலாவுபவராய் நச்சிலைப்பித்தேறி சாம்பிக்கிடப்பவராய் ஆதலுங்கூடுமோவென்று அஞ்சவேண்டியிருக்கிறது. இப்புகையிலை அமெரிக்காவிலிருந்து உலகயாத்திரைக்கு முதல் முதல் அடியெடுத்துவைத்த வேளைப்பயன்தானோ இதன்பெருக்கத்திற்கு இவ்வளவு இடங்கொடுத்துவிட்டதென்றும் பிதற்றவேண்டியுமிருக்கிறது. எது எப்படியாயினுமாகுக. இனி, சும்மாவிருத்தல் கூடாதென்பதை நீங்கள் உணரவேண்டும்.

மற்ற நாடுகளைப் பார்க்கிலும் நம் தமிழ்நாட்டிடையே இந்தப் புகையிலை பலவகையாலும் அதிகமாகச் சீரழித்து வருகிறது. சிலர்

இதனைப்பொடியாக்கி அடிக்கடி மூக்கிற்கேற்றிய வண்ணமாய்த் திரிகின்றார்கள். சிலர் நீளமாகச் சுருட்டித் தலையில் தீமூட்டி வாயில் வைத்துக்கொள்ளுகிறார்கள். சிலர் காகிதத்தில் நுழைத்துச்சுருட்டித் தீவைத்து வாயிதழிற் கவ்விக்கொள்ளுகிறார்கள். சிலர் வெற்றிலையோடிட்டு ஜீரணத்திற்கின்றியமையாத உமிழ்நீரை ஓயாது உமிழ்ந்த வண்ணமாய் மயக்கத்தாற் களிக்கின்றார்கள். வாய்த்துளையும் மூக்குத்துளையும் புகைப்போக்கிகளாக வாயிதழிரண்டும் அடுப்பாக புகையிலைச் சுருட்டும் சிகரெட்டும் விறகுகளாக, உடம்பாகிய பாத்திரத்திற் கிடக்கும் சத்தை சக்கையாக்கு மட்டும். நல்ல சமையல் வேலை நடத்துகிறார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிளம்பிய அதிசயங்களில் இதுவும் ஒன்றேயாம். இவ்வதிசயச் சூழ்ச்சியுள் நமது நாடு அழிந்து போகாதவாறு காக்குங்கடமை நம்மைச் சேர்ந்ததாம். உருமாறி வேலைசெய்யும் உருக்குலைந்த பச்சிலையாகிய புகையிலை வரலாற்றினையும் அதன் பயங்கர மான கெடுதித் தன்மையினையும் சிறிது தெரிவிக்கிறேன்.

புகையிலை வரலாறு.

புகையிலை அமெரிக்காக் கண்டத்தைப் பிறப்பிடமாகக்கொண்டு. அக்கண்டத்தின் பிறப்புரிமைபெற்ற சிவப்பிந்தியரால் போற்றப்பட்டிருந்தது. 1492-கி. பி. யில் கொலம்பஸ் என்பவரும் அவர் பரிவாரமும் சேர்ந்து கண்டுபிடித்த புதிய உலகமே அமெரிக்காவென்பது வெளிப்படை. அப்பெரியாரே கீபா (Cuba) என்னுந் தீவினை உட்புகுந்து ஆராய்ந்த பொழுது அங்குள்ள மனிதர்களிற் பலர் கொள்ளிவாய் மனிதர்களாய் உலாவித் திரிவதைக்கண்டு திரும்பி வந்து "கொள்ளிக்கட்டையை வாயில்வைத்துக்கொண்டே உலாவும் மனிதர்களைக் கியூபாவில் நாங்கள் பார்த்தோம்" என்ற அதிசயத்தைத் தங்கள் நாட்டில் வெளிப்படுத்தினார்கள். ஐம்பது வருடங்களுக்கப்பால் ஸ்பெயின் தேசத்து அரசனால் பிரான்ஸிஸ்கோ பர்ணண்டிஸ் என்பவரை மெக்ஸிக்கோ நாட்டிற்கு ஆங்குள்ள அரும் பொருள்களை நன்காராய்ந்து வரும்படி அனுப்பப்பட்டது. ஸ்பானியனாகிய பர்ணண்டஸ் என்பவர் கொள்ளிக்கட்டையாகி மனிதர் வாயிலேறியிருந்த புகையிலையை கியூபாவிலிருந்து ஸ்பெயினுக்கு முதல் முதலாகக் கொண்டுவந்தார். கி. பி, 1560-வது வருடத்தில்

ஜீன்நிக்காட் என்னும் பிரஞ்சுஸ்தானபதியால் ஸ்பெயினிலிருந்து பிரான்ஸுக்கு அனுப்பப்பட்டது. நிக்காட் என்னும் மேற்கூறிய பெயர் வழியாற் பிரசித்தமான இப் புகையிலைக்கு "நிக்கொட்டியானு டெபேக்கம்" என்று ஆதியில் பெயர் வைக்கப்பட்டிருந்தது என் பதை "மெட்டிரியா மெடிக்கா" என்னும் ஆங்கில வைத்திய நூலா லறியலாம்.

கி. பி. 1565ம் ஆண்டில் ஸர்வால்ட்டர்,ராலெப், என்பவர் புகையிலையின் பழக்கவழக்கத்தை முதலாவதாக இங்கிலாந்தில் பய னுள்ளதாகக்காட்டி நிலைநிறுத்தினர். இவர் சுருட்டுப் பிடித்துக் கொண்டிருந்த ஒருநாள் போது தமது வேலைக்காரனிடம் குடிப்ப தற்கு, பீர் கொண்டுவரச் சொன்னர். வேலைக்காரன் பீர் கொண்டு வந்து எஜமானனை நெருங்கிக் கவனித்தான். தன் எஜமானன் மூக் கிலும் வாக்கிலும் வேகமாய்ப் புகை புறப்பட்டுக் கொண்டிருப்ப தைப் பார்த்தான். ஒன்றுந்தோன்றவில்லை. எப்படியோ உடம்பிற் குள் நெருப்புப் பிடித்துக்கொண்டது என்றும் இதை யணைக்கா விடில் சிறிது நேரத்தில் எரிந்து சாம்பலாகிவிடுவாரென்றும் பயந்து பரபரப்பாகக் கையிலுள்ள பீரைக்கோப்பையோடு தலையிற்கொட்டிக் கவிழ்த்தினனும்.

இத்தன்மைத்தாய புகையிலையை இங்கிலாந்தின் அரசாயிருந்த முதலாம் ஜேம்ஸின் ஸ்தானபதி, ஸர் தாமஸ்ரோ என்பவர் கி. பி. 1615–ம், ஆண்டில், டில்லிபாதுஷாவான ஷஹாங்கீர் என்னும் சக்கர வர்த்தியின் கொலுமண்டபத்திற்சென்று பேட்டி காணும் பொழுது அரும்பொருளாக வைத்துக்கொண்டாராம். அன்று முதல் இந்தி யாவில் வேரூன்றத்தொடங்கி வடநாடு ததும்பி தென்னாட்டில்மகிழ் ந்து வீழ்ந்தது. சுமார் மூந்நூறு வருடங்களுக்குள் பதினெண் பாஷை மக்களால் அவ்வப்பாஷைகளிற் கொடுத்த பட்டப் பெயர் களைத் தாங்கி மிக்க மதிப்புடையதுபோல் எங்குப்பார்த்தாலும் உலா விக்கொண்டே வருகிறது.

புகையிலையின் தடைவிதிகள்.

ஐரோப்பாவிலுள்ள வைதீகக் கூட்டத்தாரும் இங்கிலாந்து, ருஷியா, துருக்கி முதலிய அரசாங்கத்தாரும் சுருட்டுப்பிடிக்கும்

வழக்கத்தை ஒழிக்கும் தடைவிதி ஏற்படுத்தினர்கள். அதனால் மூக்கறுபட்டவர் பலர். சவுக்கடிபட்டவர்பலர். தூக்குத்தண்டனைக் குள்ளாகி உயிரிழந்தவர்பலர். திருக்கூட்டத்தாரால் தள்ளி வைக்கப்பட்டுப் போனவர் பலர். எவ்வகைவிதிக்கும் அடங்காப் புகையிலைக்கு நமது மருத்துவர்கள் நோயாளிக்கு மருந்து கொடுக்கும்வரை "புகையிலைகூடாது" என்று விதித்துவரும்விதி எவ்வளவோடு நிற்குமோ என்பதை நீங்கள் தானறியவேண்டும்.

புகையிலையிலுள்ள நச்சுப்பொருள்கள் முதலியன.

சார்ந்தபொழுதே மயங்கவைக்கும் நிக்கொடின் என்னும் நஞ்சும் அந்நஞ்சிற்கினமா யடுத்துள்ள வப்பெயர்தழுவிய வேறு மூன்று நஞ்சுகளும், பிரிடின், பிக்கோலின், காலிடின் என்ற வேறு வேறு வாயுப்பொருள்களும், கார்பாலிக், ஹைரோஸியர்னிக் முதலிய தீ நீர்ப்பொருள்களும் பலவகைத்தீயபொருள்களும் கலந்து கிடக்கின்றன.

புகையிலையில் உள்ள நச்சுப்பொருள்களின் செயல்கள்.

நிக்கொடின் என்னும் நஞ்சானது நரம்புக்குழாய்களிற்செல்லும் இரத்தத்தையும் மூத்திரப் பைகளில் சார்ந்தேறும் இரத்தத்தையும் விரைந்து போமாறுசெய்து இரத்தநாடிகளின் மென்மைப்போக்கைக் கெடுத்து வன்மைத்தன்மையில் வைத்துவிடுந்தன்மையது.

மேற்கூறிய நிக்கொடின் என்ற நஞ்சிற்கினமாக அமைந்து கிடக்கும் நிக்கோட்டின் என்னும் நஞ்சுமிக்க கொடுமையானது. உயிரைப் பாபரப்பாகப் பற்றி உடனே மயக்குந்தன்மையுடையது. இது புதிதாக வெற்றிலையோடு புகையிலை போடப் பழகுவோரையும், சுருட்டுப்பிடிக்கத்தொடங்குவோரையும் வாய்க் குமட்டலும் வயிற்றுப்புரட்டலும் செய்விப்பது. ஜன்னி, பாரிசவாய்வு முதலியவற்றைத்தோற்றுவிப்பதாகும்.

காலடின்:–புகையிலையை நுகரும்பொழுது ஒருவகையானமணம் வீசிக்கொண்டிருப்பது. இது நச்சுப்பொருளான ஓர்வகை உப்பாகும். இது கால்கைகளின் ஆட்ட ஓட்டத்தைத்தளர்த்திவிடுவதும், பித்தம் தலைக்கேறச்செய்துவிடுவதுமான ஓர் தீயபொருள்.

பிரஸிக்ஆசிட்:–இதுவும் ஓர் கொடியநஞ்சு. இதனால் பித்தம்மயக்கம், கிறுகிறுப்பு, வாய்க்குமட்டல் முதலியனவுண்டாகும். தலைவலியையும் உண்டாக்குவது.

கரியமலவாய்வு:–இது இரத்தத்தில் கலந்து கேடு செய்யுமியல்பால் அவ்விரத்தத்திலுள்ள இரும்புச்சத்து பிராணவாயுவைப்பற்றி முடியாது செய்து மெலிவெய்தவைக்குந்தன்மையதாம். இந்த வாயு உடம்பு வேர்த்தலும் நெஞ்சுத்திகைப்படைதலும், இரத்தப்பைதுடித்தலும், மெய்நடுக்கமடைதலும், களைப்புத்தோற்றுவித்தலும் செய்யுந் தன்மையதாம். (தொடரும்)

ம. சுந்தரபாண்டிய ஓதுவார்,
தலைவர், தமிழ்வைத்தியசங்கம், மதுரை.

வேம்பத்தூர்ச்சங்கத்தார் வரலாறு.

(முன் 10-ம் பக்கத்தொடர்ச்சி.)

செவ்வைச்சூடுவார்.

இவர் இராமநாதபுரம் ஜில்லா சிவகங்கைத் தாலுகா, தர்மாசனம் வேம்பத்தூரின்கண் வாழ்ந்துவருகின்ற மறையவர் குலத்திற் கௌண்டின்ய கோத்திரத்திற்சனித்தவர். இவருடைய தந்தைதாய் பெயர் யாதொன்றும் விவரமாகத் தெரியவில்லை. ஆனால் தற்பொழுது இச் செவ்வைச்சூடுவாரின் வம்சத்தவர் திருநெல்வேலி ஜில்லா தென்காசியில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுமெமது உறவினர்களேயாவர். இச்செவ்வைச்சூடுவாரினியற்பெயர் மாதவ பண்டிதரென்பது. இம் மாதவபண்டிதர் கவிச்சக்ரவர்த்தியாங் கம்பநாட்டாழ்வாரையொப்பத் தாமும் பதினாயிரங் கிரந்தமுள்ள வியாசபாகவதத்தைத் தமிழில் ஐயாயிரஞ் செய்யுளாகப் பாடியுள்ளார்.

இவரது கல்வித்திறனையுஞ் சொல்வன்மையையுமிவரது பாகவத நூலின்கண் மிகுதியும் பார்த்துணரலாம். இப்பெரும் புலவர் சிகாமணியாகிய செவ்வைச்சூடுவாரே பாகவதத்தைப் பாடியுள்ளாரென்பதற்கு எங்கள்வீட்டுப் பாகவத ஏட்டுப்பிரதியிலுள்ள,

"த்திக்குமறு பிறப்பொழித்துக் கதிகொடுக்கும் பாகவத
கதையை முன்ன
மதிக்குமுயர் வடமொழியிற் புனைந்தருளவ் வியாதமுனி
வானே மீள
வுதிக்குநிம்பை மாதவபண் டிதச்செவ்வைச் சூடியென
வுலகு போற்ற
விதிக்குமறை யவர்குலத்திற் றோன்றியருந் தமிழாலும்
விளம்பி னானே."

என்னுஞ் செய்யுளினிது விளக்குகின்றது காண்க.

இஃதிங்ஙனமிருக்க, பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதராயிருந்த இராஜகோபால பிள்ளையவர்கள், இப்புலவரின் சரித்திர வுண்மையையறியாது, ஆரியப்புலவர் பாகவதமெனத் தவறாக வெளியிட்டுள்ளார். பின்பு அத்தவற்றை மறுத்துச் செந்தமிழ் நாலாந் தொகுதியில் எமதரசனு மன்னதாதாவுமாகிக் கொடையிற் பாரியெனவிளங்கிய இராமநாதபுரம் விஜயரெகுநாத பாஸ்காசேதுபதி மஹாராஜா அவர்களாற்றமது சமஸ்தான வித்துவானாகப் பாராட்டப் பெற்றுத் தற்பொழுதுஞ் சமஸ்தான வித்துவானாகவிருந்துவரும் ஸ்ரீமத் உ. வே. ரா. இராகவையங்காரவர்கள் தக்க வாதாரத்துடன் வெளியிட்டுள்ளார். அன்னார்க்கியாமெம்மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேம்.

இனி இச்செவ்வைச்சூடுவாரின் பாகவதத்திற்குறிப்பிட்ட சில கவிகளைமாத்திரமெடுத்து விளக்கி மேற் செல்கின்றேன். அவை வருமாறு.

சடகோபர் துதி.

சிந்துகத்துக் கீழமர்ந்து திருமதுர கவியடிகள் சிந்தையுட்க
சிந்தகத்துப் பேரின்பக் கடல்கோப்பத் திரைப்புணரி திவள்வெண்முத்துச்
சிந்தகத்து மன்னுயிர்களொருபெருவீடடையுநெறி தெருண்டு சூழ்வி
சிந்தகத்து மலமறச்செந் தமிழ்மறைசொல் பெருமுனிதான் சிந்தித்துய்வாம்.

(இதன் பொருள்) புளியமரத்தின் கீழெழுந்தருளி, அலைகள் வாய்ந்த கடலால் வெள்ளிய முத்துக்களைச் சிந்தப்பெற்ற வுலகிலுள்ள மாக்கள் ஒப்பற்ற மோக்ஷவீட்டையும் மார்க்கத்தைத்தெரிந்து

கட்டுண்டுவரு மஞ்ஞானத்தைப் போக்கத்தமிழ் வேதத்தைக் கூறித் தந்த ஸ்ரீசடகோபாது திருவடித்தாமரைகளை நான் என் சிந்தையில் மதூரம்வாய்ந்த கவிகளினடிகளுதித்திடுமாறும், ஆனந்த் சாகரத்தில் மூழ்குவித்தற்பொருட்டும் சிந்தித்துக் கடைத்தேறுவேம். (என்பது)

இதனுனே இப்புலவர் பெருந்தகை தன்னுடைய கல்வித்திறத்தை துதிச்செய்யுண்முகத்தே விளக்கியிருப்பது கவனிக்கத்தக்கது.

மேலும், துருவன்பதம்பெற்ற வத்தியாயத்தில் கூறியிருக்கும் செய்யுட்களின் சொற்களும் சொற்களின் பொருணயமும் மனத்தின் கண்வைத்துச் சிந்திக்கத்தக்கனவாயிருக்கின்றமை காண்க.

"தண்டுழாய் மாலைமார்ப தாமரைக் காடுபூத்த
கொண்டலே விளங்கு நீலக் குன்றமே நுனது பாத
புண்டரீ கங்க ளல்லாற் போதுது யிறைஞ்சப் பெற்ருர்
குண்டுகொல் லுயர்வீட் டின்ப முறுதிது மெய்ம்மைத் தாமால்."

"மண்டல நிறைந்த திங்கள் வதனமுங் கமலக் கண்ணும்
குண்டலஞ் சுடருங் காதுங் குறுநகைப் பவள வாயும்
தண்டுழா யலங்கல் மார்புந் தடக்கையோர் நான்கு மாகக்
கண்டனன் மறையுங் காணுக் கரியவ னுருவ மம்மா."

அன்றியும் கண்ணன் துவாரகையடைந்த வத்தியாயத்தில் கண்ணனது வருகையினழகைக்கண்ட கோபிகா ஸ்திரீகள் விரகங் கொண்ட நிலையைக்கூறு கவிநயங்கள் சிந்திக்கற்பாலவாம்.

வஞ்சி விருத்தம்.

"ஆணவரவு வானெழில்
காணநூறு கோடிக்கண்
பாணியாற் படைத்திலன்
வாணிமன்னு வானென்பார்"

இக்கவியிற் பிரமன் நமக்கு நூறுகோடி கண்படைக்கவில்லை யேயென்றிரங்குதல் கூறப்பட்டது காண்க.

இன்னும்,

“சுரும்பிமிர்கூந்தல்சோரத்தொடர்ந்தனளசோதைவிக்க
விரும்பினையுரலோடும்போய்வேரோடுமருதஞ்சாய்த்தாய்
பெரும்பணை துணித்தாயன்றுபெண்பழிகொள்ளும்வேடன்
கரும்பினைமுறிக்ககில்லாயெனச்சிலர்கழறிச்சோர்வார்”

சிலமாத ரடியில்வருமாறு கூறுவார்: பாலியத்தில் அசோதை யுரலிற்கட்ட அவ்வுரலோடுபோய் மருதமரத்தைச்சாய்க்கும் தன்மை வாய்ந்த உனக்கு மன்மதனுடைய கரும்பை யொடிக்க வலியில்லாது போனமை என்ன காரணம்?

இனியிவர் அரும்பெருங் கற்பனாலங்காரம் சொல்லியிருத்தல் நோக்கத்தக்கது.

“விசும்பிடஞ்சிறியதென்னவீங்கிளங்கொங்கைதாங்கி
ஒசிந்துநுண்மருங்குநோவவொலிகருங்கூந்தலுழ
அசும்புபொற்கலாபமேங்கவணிசிலம்பாற்றவோடிப்
பசும்புயல்வண்ணத்தண்ணல்பண்வலைச்சென்றுபட்டார்”

கலியுகத்தின் வியப்பு.

மேலும்,

“கடக்கருவலிமைசான்றகலியெனுங்காலத்தாசை
யடக்கரிதாகியுண்மையருள்பொறைபுனிதமாயுள்
உடற்குறுதிண்மையுந்தியுற்றிடுநினைவுபார்மேல்
நடக்குறுதன்மமெல்லாம்நாட்குநாட்குறையுமம்மா”

இவ்வொரு செய்யுளானே கலியுகத்தினடக்கும் விஷயங்களைச் சூசிப்பித்திருப்பது பாராட்டத்தக்கதேயாம்.

இன்னுமிக்கலியுக தர்மத்திலுலகத்தார் சிலர் மயிர்வளர்த்தல் வெட்டிவிடல் இத்தியாதி செய்கையா லழகு நிறைகின்றதென்றும், வயிற்றுக்குணவு தேடிப் பெற்றுவாழ்வதே உயர்ந்த நலமென்றும், நினைத்துப் பூஜை முதலிய நற்கிரிகைகள் செய்யாமல் வாழ்வாரென்பதை யடியில்வரும் செய்யுளால் விளக்குவதுகாண்க.

"உயர்பயனுவதிங்குதாத்தூண்பெறல்
மயிர்நனிவளர்ப்பதேவனப்பென்றுன்னுவார்
புயல்வளங்காத்தலிற்பொலிவழிந்ததம்
பயிர்வளங்கரிந்திடப்பசியின்வைகுவார்"

தன்னுடைச் சோதிக் கெழுந்தருளிய வத்தியாயம்.

இனி,

"முக்கணன்முதலியமொய்புயிர்க்குழாம்
ஒக்கநன்கிழைக்குமாறுதவினுயெனே
மக்களிலொருவனுவந்துதோன்றினே
சிக்கறநின்செயறெரியற்பாலதோ"

(பொருள்.)

திரிநேத்திரதாரியாகிய ஈசன் முதல் மற்றச்சீவப்பிராணிகள் வரை சமத்துவங்கொண்டு நன்மை செய்ய வேண்டுமென்றென்னைப் படைத்துப் பின், படைத்த நீயே மனிதர்களிலொருவனுக வந்து தோன்றினே. இவ்வாறு திருச்செயல்கள் செய்யும் நின்செயலையெங்ஙனம் புன் மதியையுடையேனுகிய நான் தெரிந்துகொள்வதுஎன்றபிப்பிராயம் காட்டியிருப்பதையும் மனதிலடிக்கடி சிந்தித்துத் தெளிதல் வேண்டுமன்றே? (தொடரும்)

வேம்பத்தூர் பி. பாஸ்கரய்யர்.
தமிழ்ப்பண்டிதர்.

காமந்தகீய நீதிசாரம்.

(25-ம் பக்கத் தொடர்ச்சி.)

45. விட்டிற்பூச்சி விளக்கின் ஒளியைக்கண்டு கண்கெட்டு அதில் விழுந்து நிச்சயமாக இறந்துபோகின்றது.

46. கண்ணுக்கெட்டாத ஆழமான நீரில் வசித்துக்கொண்டிருக்கும் மீன், சுவையைக்கருதி மாமிசத்துடன் கூடிய தூண்டில் முள்ளில் வந்து அகப்பட்டுக்கொண்டு நாசத்தையடைகிறது.

47. வண்டு நறுமணத்தில் ஆசைகொண்டு யானையின் மத நீரைக்குடிக்கவிரும்பிப்போய் அவ்யானையினுடைய காதினுல்மோதப்பட்டுத் துன்பத்துடன் இறக்கிறது.

48. விஷத்தை ஒத்த இவ்வைந்து இந்திரிய விஷயங்களில் ஒவ்வொன்றுமே தனித்தனி ஒருவனைக்கெடுத்துவிடும். அங்ஙனமாக ஒருவன் இவ்வைந்து விஷயங்களிலும் மூழ்குவானானால் அவன் எவ்விதம் நன்மையை அடைவான்?

49. ஒருவன் அடக்கமுடையவனாயிருந்துகொண்டு இந்திரிய விஷயங்களில் பற்றுதல் இல்லாமல் அவற்றை அனுபவிக்க வேண்டும். பொருளிருப்பதன் பலன் இன்பத்தை அனுபவித்தலாம். இன்பம் கெடுமேயானால் செல்வத்திற்குப் பலனில்லை.

50. ஓர் அரசன் பெண்களிடத்தில் எப்பொழுதுமே மோகம் கொண்டிருப்பானானால் பிற்காலத்தில் இளமையினாலும் செல்வத்தினாலும் திருப்தியடையாமல் அவற்றை இழந்து கண்ணீர் விட்டு வீணாகப் புலம்புவான்.

51. அறத்தால் பொருளும், பொருளால் இன்பமும், இன்பத்தால் சுகபலமும் உண்டாகின்றன. அவற்றால் அறம் பொருள்களில் வழுவித் தந்திரமின்றி இன்பத்தை அனுபவிக்கின்றவன் அறம் பொருள்களைக் கெடுத்துத் தன்னையும் கெடுத்துக்கொள்கிறான்.

52. பெண்பால் என்ற வார்த்தையே ஒருவனுக்கு மகிழ்ச்சியை உண்டுபண்ணி மனத்தைக் கலக்குகின்றது, அங்ஙனமாக மிக்க அழகு பொருந்திய புருவங்களையுடைய பெண்களைப் பார்த்தால் வேறு சொல்வதற்கு என்ன இருக்கிறது?

53. காம விஷயங்களில் ஊக்கமுண்டாக்குவதில் வல்லமை பொருந்தியவளும், இனிமையாகவும் மென்மையாகவும் பேசுபவளும், கடை சிவந்த கண்களையுடையவளும் ஆன ஒருபெண் தன்னிடத்தில் விருப்பமுள்ள ஒருவனை இரகசியத்தில் நிச்சயமாக மதிமயங்கும்படி செய்வாள்.

54. சந்தியா காலமானது, தெளிந்துள்ளதும், கிரணங்களைப் பரப்புவதும் ஆன சந்திரமண்டலத்தைச் சிவந்த நிறமுள்ளதாகச் செய்வதுபோல, இந்திரியங்களை அடக்கிய முனிவர்களுடைய மனத்தையும் ஆசையுள்ளதாக ஒரு பெண் நிச்சயமாகவே செய்வாள்.

55. மலைகள் நீர்த்துளிகளால் தொளைபடுவதுபோல் இந்திரியங்களை அடக்கிய பெரியோர்களுங்கூட, மனத்தை மகிழ்வித்துக்

கவரும் தன்மை வாய்ந்தவர்களும் மெல்லிய நடையை உடையவர்களும் ஆகிய பெண்களால் மனம் வேறுபடுத்தப்படுகின்றனர்.

56. அரசர்களுக்கு வேட்டையாடல், சூதாடல், கட்குடித்தல் ஆகிய இம்மூன்றும் விலக்கத்தக்கவைகள். இவற்றில் வேட்டையாடினதால் பாண்டுவுக்கும், சூதாடினதால் நளனுக்கும், கட்குடித்ததால் விருஷ்ணி வம்சத்தவர்களுக்கும் கேடுகள் நேர்ந்திருக்கின்றன.

57. காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சர்யம் (மானம்,) ஆகிய இவை ஆறும் அரிஷட்வர்க்கம்—அறுவகை உட்பகை—என்று சொல்லப்படும். இவ்வாறும் அரசர்களால் நீக்கப்பட வேண்டியவை. இவற்றை அரசர்கள் விட்டுவிட்டால் நன்மையுடையவர்களாக ஆவார்கள்.

58-59. மேலேகூறிய அறுவகை உட்பகைகளுக்கும் ஆளான காரணத்தால் கீழ்க்கண்ட அரசர்கள் கேட்டையடைந்தார்கள். தாண்டக்யன் என்னும் அரசன் காமத்தாலும், ஜனமேஜயன் கோபத்தாலும், ராஜரிஷியாகிய அயிளன்—புரூரவஸ்—லோபத்தாலும், வாதாபி என்னும் அசுரன் மோகத்தாலும், புலஸ்தியர் வம்சத்தில் பிறந்த இராவணன் மானத்தாலும், தம்போத்பவன் என்னும் அரசன் மதத்தாலும் அழிந்தார்கள்.

60. இந்திரியங்களை அடக்கினவரான ஜாமதக்னி, பரசுராம முனிவரும், நபாகனுடைய புத்திரனான அம்பரீஷனும் அறுவகை உட்பகைகளையும் வென்றதால் நீடித்த காலம் இவ்வுலகை ஆண்டனர்.

முதற்பிரகாரணம் முற்றிற்று.

இரண்டாவது பிரகாரணம்.

கல்வி அடக்கம் ஆகியவைகளை அடைவது.

---

61. இவ்வுலகத்திலுள்ள பெரியோர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட அறம் பொருள்களை ஆதரவுடன் வளரச்செய்துகொண்டும் இந்திரியங்களை அடக்கிக்கொண்டும் குருவை வணங்கவேண்டும்.

62. நூலறிவின் பொருட்டுக் குருவை வழிபடவேண்டும். நூலின் அறிவு அடக்கத்தை உண்டுபண்ணும். நூலறிவினால் உண்டாகிய அடக்கமுள்ள அரசன் தனக்குத் துன்பம் வந்தகாலத்திலும் தளர்ச்சியடைகிறதில்லை.

63. பெரியோர்களை வழிபடும் அரசன் நல்லவர்களால் கொண்டாடப்படுகிறான். தீயவர்களால் தூண்டப்பட்டபோதிலும் அவன் தீயசெயல்களைச் செய்கிறதில்லை.

64. தினந்தோறும் குருவினிடமிருந்து கலைகளை நன்றாகப் பயின்றுவரும் அரசன் சத்துருக்களை அழித்துச் சுக்கில பக்ஷத்துச் சந்திரன்போல் மேன்மையை அடைகிறான்.

65. இந்திரியங்களை அடக்கி இராஜநீதியின்படி ஆளுகின்ற அரசனுக்குச் செல்வம் ஓங்கிவளர்கின்றது. புகழ் ஆகாயத்தை அளாவுகின்றது.

66. இவ்விதம் இராஜநீதியின்படி இவ்வுலகத்தை ஆளுகிற அடக்கமுள்ள அரசன் முன்னுள்ள அரசர்களால் ஆளப்பட்டதும் மஹாமேருவின் உன்னத சிகரம்போல் விளங்கிக்கொண்டிருப்பதுமான செல்வப்பெருக்குள்ள இராஜ்யத்தை அடைகிறான்.

67. இயற்கையிலேயே இராஜத்வம் என்பது உலகத்தின் சாமான்ய ஜனங்களின் தன்மையைப் பார்க்கிலும் வேறுபட்டதாகவும் கர்வத்துடன் கூடியதாகவும் இருக்கின்றது. ஆகையால் அவனுடைய குரு அவனுக்கு இராஜத்துவத்துடன் வணக்கத்தையும் உண்டாக்கவேண்டும். அவ்வணக்கம் நீதி சாஸ்திரத்தின் அறிவை வளரச்செய்வதில் முதன்மை வாய்ந்ததாக இருக்கின்றது.

68. அடக்கமுள்ள அரசனை எல்லாரும் மிகவும் வணங்குகின்றார்கள். அரசர்களுக்கு வணக்கமே அணிகலனும். குடிகளுக்குத் தக்க காலங்களில் கொடுப்பவனும் மெதுவாக இறைப்பொருளைப் பெறுகின்றவனுமான அரசன், மதப்பெருக்குள்ளதும் அசைந்து கொண்டிருக்கின்ற துதிக்கையை உடையதுமான நல்ல இலக்கணமமைந்த யானையை ஒத்தவனாகின்றான்.

69. ஆசார்யர் கல்விகற்றுக்கொள்ளப்படுவதற்காக (மாணக்கர்களால்) வணங்கப்படுகிறர். புலவர்களிடத்திலிருந்து கேட்கப்பட்ட கல்வியானது நல்ல அறிவை உண்டுபண்ணுகிறது. பெரியோர்களுடைய கொள்கைகளைக் கேட்டுணர்ந்து பின்பற்றி ஒழுகினல் அது செல்வப்பெருக்கிற்கு நல்ல காரணமாக ஆகும்.

70. பரிசுத்தமான ஓர் அரசன் கல்வியில் தேர்ந்த குருவை வணங்கி வழிபட்டால் செல்வப்பெருக்கை அடையத்தகுதியுள்ளவனுகிருன், அடக்கமுள்ளவன் இராஜசிம்மாசனத்தை அடைவதற்கும் தன் இராஜ்யத்தில் அமைதியை உண்டுபண்ணுவதற்கும் தகுதியுள்ளவனுக ஆகின்றுன்.

71. மிக்க வல்லமையுள்ள அரசன் அடக்கமில்லாதவனுக ஆயினுல் அவனை அவனுடைய பகைவர்கள் மிகஎளிதில் வென்றுவிடுவார்கள். அரசன் வல்லமையற்றவனுக இருந்தாலும் அவன் அடக்கம், நீதி சாஸ்திரம் இவற்றை அறிந்தவனுக இருந்தால் அவனுக்கு ஒருகாலத்திலும் ஓரிடத்திலும் அபஜயம் என்பது உண்டாகாது.

இரண்டாவது பிரகாரணம் முற்றிற்று,

முதல் சருக்கம் முற்றிற்று.

பத்திராசிரியர்.

சம்பகமாலினி.

(36-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஜய:—பிராஹ்ஙநேயே! நான் ஓர் ஏழை. பிறப்பு வளர்ப்பு அறியப்படாதவன். நான் என் வயிற்றை வளர்ப்பதற்குத் தொழிலைத் தேடிக்கொண்டிருக்கின்றேன். இந்நிலையில் நாமிருவரும் சேர்ந்து வாழ்வது கூடாதகாரியமாம் (மேற்றிசை வானத்தை நிமிர்ந்து பார்க்கிருன்) நிற்க, பொழுது வீழ்ந்து விட்டது. தாத்காலிகமாக அருகில் உள்ள நகரத்தைப்போயடைவோம். அங்கே சேர்ந்தபிறகு நாம் சேர்ந்திருப்பது பிரிந்திருப்பது என்பதைப்பற்றிக் கருதுவோம். எங்ஙனமாயினும் நாம் சேர்ந்து வாழ்வது தகுதியன்று அது யாவரும் ஐயம் கொள்வதற்கு இடமாகும். என்னைப்பிறர் எவ்விதம் கூறி

னும் கூறுக. உனது நிலைமையையும் நற்பெயரையும் கருதி நாமிரு வரும் பிரிந்தே இருக்கவேண்டும் என்று நினைக்கிறேன்.

பிரஹந்:—நண்பரே! நீர் கூறுவது உண்மையே. ஆயினும்,முன் பின்னறியாத ஒரு நகரத்தில் நான் பிழைக்கும் வழியாது? பெரிய நகரங்களில் விடர்கள் என்னையொத்த அநாதைப்பெண்களைத் தங்கள் மாயவலையிற் சிக்கவைப்பார்களே! அவர்கள் கையிலோ நான் அகப் படுவது! இதற்காகவோ நான் சிறையினின்றும் தப்பிவந்தது? ஐயோ! நகரங்களில் என்போன்ற அநாதைகள் மானமிழக்காமல் வாழமுடியுமா? உம்மைப்பார்த்தால் நல்லவராகக்காணப்படுகிறீர்.நீர் என்னை நகரத்தில் கொண்டுபோய்த் தனிமையாக விடுவதினும் இவ் விடத்திலேயே தனிமையாகவிட்டுச் செல்லலாமே.இங்கேயுள்ள வன விலங்குகள் என் மானத்தைக்கெடுக்க முயலமாட்டா. என் உயி ரையே மாய்க்கும். அதுவே நான் விரும்புவதும், நீர் என்னைப்பற் றிக்கருதவேண்டாம். இவ்விடத்தில் விட்டுச்செல்க. (பின் தங்குகின் றாள்.)

ஐய:—(தனக்குள்) இதற்கு நாம் யாது செய்வது? தர்ம சங் கடம் என்று சொல்வார்களே; இது தான் அதுபோலும். இவளை என் னுடன் வைத்துக்கொண்டால் இருவர் பெயருக்கும் இகழ்ச்சி உண் டாகும். இவளைத்தனிமையில் விட்டால், இவள் திண்டாடுவாள். நான் இருதலைக்கொள்ளியெறும்புபோலாயினேன். இதுவும் கட வுள் செயலே. நாமாகச்செய்து கொண்டதல்ல. வருவது வந்தே தீரும். (பிரஹந்நளையை நோக்கிப்) பெண்ணே! தயங்கவேண்டாம். எதுவரினும் உன்னைப்பாதுகாப்பேன். என்னுடன்வருக. என்னுடன் வசிக்க. இனி நாம் இங்கே நிற்கலாகாது. விரைந்து செல்வோம். இருட்டிவிட்டது. (பாபாப்பைக்காட்டுகின்றான்.)

பிரஹந்:—ஆபத்திற்காக்கும் அருந்தெய்வமே! உமக்கு யாது கைம்மாறு செய்வேன்?

(இருவரும் செல்கின்றார்கள்.)

(தொடரும்.)

K. இராமநாதையர்,
வக்கீல், சாத்தூர்.

விடுகதை வினாவிற்கு விடை:

ஒன்பது அக்கரங்கள் உள்ள பெயர்.

1	2	3	4	5	6	7	8	9
க	தி	ரீ	ந	ர	சி	ம்	ம	ன்

1+7=கம்—ஆகாய மேகம்.

6+1+5+7=சிகாம்—நிலைபெற்றவுச்சி.

4+2=நதி—நிதியொத்த ஆறு.

8+1+5+7=மகாம்— நீதிவேம்பன் கொடி (பாண்டியன் கொடி மீனக்கொடி)

8+2=மதி—கலைபெற்ற சந்திரன்.

4+3=நரி—தந்திரச்சம்புகன்.

1+3=கரி—வேழம். (யானை)

4+5+9=நான்—மானிட நாமம். (மனிதன்)

II. விடை:—துவரை.

துவரை=துவாரகை, கிருஷ்ணன் இருக்குமிடம் (மாயன்பதி) 'துவரை' யில் முதலெழுத்தாகிய 'து' நீங்க 'வரை' மலை யென்று பொருள்படும். அவ்விடையில் நடுவெழுத்தாகிய 'வ!' நீங்க 'துரை' யென்பது நீதிமன். மூன்றெழுத்தாகிய 'து,' 'வ.' 'ரை' சேரவும் ஓர் தானியமாகிய 'துவரை' யெனவாகும்.

D. A. வெங்கட்டராவ்.

மாணவன், 2-11-23.

குறிப்பு— மேற்காட்டிய விடைகளைப் போலவே 7-12-23ல் "விருதை வாசி" என்பவரும், 31-12-23ல் கே. எஸ். குருசாமிமுதலியார், எட்டாம் வகுப்பு, சேதுபதி ஐஸ்கூல் மாணவரும் நமக்கு அனுப்பியுள்ளார்கள். (ப—ர்.)

அனுபவ ஸங்கீதம்.

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லா உலகங்களும் உண்டாவதற்குமுன், ஸமஸ்த சராசரங்களிலும் எந்த வஸ்து வியாபித்திருந்ததோ அந்த வஸ்துவே ஆகாயமென்ற ஒரு பெயருடையதாகி உலக உற்பத்திக்கு ஹேதுவான பஞ்சபூதங்களையும் உண்டுபண்ணியது. அந்தப் பஞ்ச பூதங்களுடைய விகாரங்களே இந்த ப்ரபஞ்சமாகும். இந்த ப்ரபஞ்சமானது ஜீவகோடிகளாலேயே நிறைந்திருக்கிறது. ஸகல ஜீவர்களுக்கும் ஜீவனாய் விளங்கக்கூடியது நாதமே. அந்த அகண்டமான நாதத்தை, ஆதி புருஷர்களான மகான்கள், பாஷா ரூபமான வரி வடிவங்களென்று அகாராதிக்ஷகாராந்தமான அக்ஷரங்களாக வகுத்தார்கள். எப்படிப்பரவெளியான நாதமானது பூதங்களாகவும், ப்ரபஞ்சங்களாகவும், ஜீவர்களாகவும் மாறியதோ அவ்விதமே அகண்டமான நாதமானது ஒலிவடிவங்கொண்டு வரிவடிவமாகி அக்ஷரங்களெனப் பெயர் பெற்றது. இந்த அகாராதிக்ஷகாரந்தமான அக்ஷரங்களுள் சிலவற்றை ஒன்று சேர்த்துப் பஞ்சாக்ஷரங்களென்றும், ஷடாக்ஷரங்களென்றும், அஷ்டாக்ஷரங்களென்றும், துவாதசாக்ஷரங்களென்றும் பல வித்தியாஸங்களுள்ளனவாக எழுகோடி மகா மந்திரங்களைச் செய்து அவ்வவ் மந்திர்ங்கட்கு அதிஷ்டான தேவதைகளாகப் பலதெய்வங்களையும் நம் முன்னோர்களானமகான்கள், அவரவர்கள் பக்குவத்திற்குத் தக்கபடி உபாஸித்து அஷ்டமாஸித்திகளையும், நிக்ரக அனுக்ரக சக்திகளையும், அடைந்ததற்கு ஆதி காரணமான நாதமன்றோ முக்கிய ஜீவனாகஇருந்தது. இன்னும் மும்மூர்த்திகளும் நாதத்தையே உபாஸித்து, அந்த நாதவடிவான உடலோடு பிரகாசிக்கிறார்கள். நாதமயமான மந்திரங்கள் பலவும் பற்பல ரூபங்களை உண்டு பண்ணும் செயலை உடையதாயிருக்கின்றன. மேலும் ஹரீஹராதி தேவதைகள் நாதமயமான மந்திரத்தினாலே உபாஸிக்கிறவர்களுடைய எண்ணத்திலுண்டான ரூபம்போல் தோற்றுகிறதுஉண்மையன்றோ? திருஷ்டாந்தமாகக் காளிமந்திரத்தை உபாஸிக்கிறவன் கனவிலும் நனவிலும், தான் உபாஸிக்கும் காளிகாதேவி

யையே கண்களால் காணுகிறான் அந்தந்தத்தேவதையின் பிரஸாதத்தாலேயே க்ஷுக்ஷுத்திர தேவதைகளை வெருட்டவும் தான் கோரும் ஸகல ஸித்திகளை அடையவும் செய்கிறான். அவ்வித காளி ரூபமாகத் தோற்றின தேவதையோ மந்திரரூபமான நாதத்தில் அடங்கினதே. நாதமயமான சரீரிகளாய் விளங்கும் தெய்வங்களை ஸுலபமாய் வசப் படுத்தித் தமது இஷ்டஸித்தியை அடைவதற்கு நாதோபாஸனையே மிகவும் முக்கியமானது. அந்த நாதத்தைப் பிரம்ம, விஷ்ணு, ருத்திராதிகளான மும்மூர்த்திகளும் மற்றத்தேவர்களும் இன்னும் உபாஸிக்கிறார்களென்றால் அந்த நாதத்தின் பெருமையை அளவிடமுடியுமோ! நாதமே சிவாகாரமென்றும், அந்தச் சிவமே வீணாநாதத்தில் ஈடுபட்டதென்றும், வேதப்பிரமாணங்களோடு கூடின அனேக சரித்திரங்களுண்டு.

அதில் ஓர்கதை பின்வருமாறு.

அசுவதரர் கம்பலவர் என்ற இருநாககுமாரர்கள் வீணாகானத்தில் மிகுந்த தேர்ச்சிபெற்றவர்களாய் நாதவடிவான பரமசிவன் ஸன்னிதியில் தங்களது வீணாகானத்தைச்செய்ய மிக்க ஆவல்கொண்டு நந்திகேசுவரர் ஸன்னிதியில் தங்களது எண்ணத்தைப்பூர்த்தி செய்து வைக்குமாறு வேண்டிக்கொண்டனர். நந்திகேசுவரரும் அந்நாக குமாரர்களின் வீணாகானத்தில் மிகவும் இன்புற்று, பரமசிவனது திருச்சன்னிதானத்தில் நாககுமாரர்களின் அபிப்பிராயத்தை விண்ணப்பித்துக்கொள்ளப் பரமசிவனும் அவ்வாலிபர்களிடத்து மிக்க கிருபை கூர்ந்து தனது ஸன்னிதியில் வீணாகானம் செய்யும்படி திருவாய் மலர்ந்தருளினர். அப்பொழுது அச்சிறாரிருவரும் உடல் பூரித்து ஆநந்தக்கடலிலாழ்ந்து கானம் செய்யலானார்கள்.

(இன்னும் வரும்)

L. முத்தையா பாகவதர்,

ஸ்ரீதியாகராஜ ஸங்கீத வித்யாலயம், மதுரை.

நீதிபதி யோகியான விநோதக்கதை.

ஒரூரில், அந்தணரொருவர் வசித்து வந்தார். அவர் தம் குருவையடைந்து, 'சுவாமி! அடியேன் கடைத்தேறுவதற்கு உரிய மார்க்கத்தை யுபதேசித்தருளவேண்டும்' என்று பிரார்த்தித்தார். அக்குரு, அவ்வந்தணரை நோக்கி, "அந்தணரே! 'நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே' என்று பெரியார் பணித்திருப்பதால், நீர், பஞ்சாக்ஷரத்தின் சுருக்கமாகச் 'சிவ' நாமத்தை யுச்சரித்துக்கொண்டிருந்தால் உய்ந்து கடைத்தேறலாம்" என்று உபதேசித்தார். அன்று முதல் அவ்வந்தணர், வேறு ஒரு மொழியையும் நாவினால் உச்சரியாமல் எப்பொழுதும், சிவநாமத்தையே உச்சரித்துக்கொண்டிருந்தார்.

அவ்வூரிலுள்ள சிறுவரும் பெரியோரும் எப்பொழுது அவரைக் கண்டாலும் 'சிவசிவ' என்று கூறுவார்கள். அவரும் 'சிவசிவ' என்று மறுமொழி கூறுவர். அதனால் அவருக்கு 'சிவநாம யோகியார்' என்று பெயர் வழங்கலாயிற்று. அவர் அவ்வூரில் பலர் நடுவில் வசிப்பது, தமது சிவநாமஸ்மரணைக்கு இடையூறாக இருக்கிறது, என்று கருதிச், சமீபத்திலுள்ள ஆற்றங்கரையிலிருந்த ஒருமண்டபத்தில் அமர்ந்து, 'சிவசிவ' என்று கூறி யோகம் செய்துகொண்டிருந்தார்.

இவர் இங்ஙனமிருக்க, அவ்வூரிலுள்ள வேறு அந்தணரிருவர் வெகுநாட்களாகத் தம்முள் பகைமைகொண்டிருந்தனர். அவர்கள் இருவரும், அம்மண்டபத்தின் அருகில் ஒருநாள் சந்தித்தனர். முதலில் அவர்கள் தங்கள் வாயினால் பரிமாறிக்கொண்டனர். பின்னர் அதுமுற்றிக் கையாலும் பரிமாறிக்கொண்டு, கட்டிப்புரண்டு, கீழே விழுந்து உருண்டு, ஓய்ந்து, இளைத்துப்போய்விட்டார்கள். பிறகு அவர்கள் எழுந்து ஊருக்குள்போய் நீதிபதியிடம் இருவரும் தனித்தனி 'பிராது' செய்துகொண்டார்கள். நீதிபதி அவர்களை யழைத்து 'உங்கள் வழக்கிற்குச்சாட்சியுண்டோ' என்றுகேட்க, அவர்களிருவரும் சிவநாமயோகியாரையே சாட்சியாகக்கூறினார்கள். நீதிபதி, அவரை யழைத்துவரும்வண்ணம் கட்டளையிட அவ்விதமே யோகியார் நீதித்தலத்தில் வந்துநின்றார். நீதிபதி அவரைநோக்கி, "யோகியாரே! உமக்கு இவ்விஷயத்தில் என்னதெரியும்?

யோகியார்—சிவசிவ.

நீதிபதி—இவர் அடித்தாரா? (தொடரும்).

ரா. காமேசுரபாகவதர். சிந்தாமணி.